அழகுசாதன அன்பளிப்பு பொருள்களையும் கைக்கடிகாரங்களையும் வாங்குவதற்கு சிறந்த ஸ்தாபனம்
ஞானம் விற்பனைக் கூடம்
66, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

எவர்சில்வர் பிளாஸ்ரிக், அலுமினிய பொருள்களை வாங்குவதற்கு யாழ். நகரில் சிறந்த ஸ்தாபனம்:
ஞானம் விற்பனைக் கூடம்
66, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 04 திங்கட்கிழமை (17 - 04 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 140

## புலிகளிடமிருந்து பதிலை எதிர்பார்த்துள்ளோம்

### அமைச்சர் பீரிஸ் தகவல்

கொழும்பு, ஏப். 17

வடபகுதி மீதான பொருளாதாரத் தடை மற்றும் மீன்பிடித் தடைகளை மேலும் தளர்த்துவதற்கு இணக்கம் தெரிவித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கடந்த புதனன்று அனுப்பிய கடிதத்துக்கு விடுதலைப் புலிகளிடமிருந்து பதிலை எதிர்பார்த்துள்ளோம்.

நீதி, அரசமைப்பு விவகார வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உத்தேச அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடனும் அரசு கலந்தாலோசிக்கும் என்றும் அவர் தெரிவித்தார். [ஐ-14]

## அன்னை பூபதி நினைவாக உணர்வுபூர்வ நிகழ்வுகள்

தியாகி அன்னை பூபதியின் ஏழாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் தமிழீழம் முழுவதும் உணர்வு பூர்வமாக நடைபெற்று வருகின்றன.

இன்றும், நாளையும் கோட்டரீதியாக உண்ணாவிரத நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

தென் தமிழீழம் உட்பட தமிழீழத்தின் பலபாகங்களிலும் ஆங்காங்கே ஒலிபெருக்கிகள் கட்டப்பட்டு அன்னை பூபதி நினைவுப் பாடல்கள் ஒலிக்கப்படுகின்றன.

அன்னை பூபதியின் உருவப் படங்களும் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் வைக்கப்பட்டுள்ளதுடன் முக்கிய சந்திகளில் வர்ண அலங்காரிப்புகளும் செய்யப்பட்டுள்ளன.

அன்னை பூபதி நினைவு நிறைவு நாள் நிகழ்வுகளின் போது எழுச்சி ஊர்வலங்களை நடத்தவும் ஏற்பாடாகி உள்ளது. [உ-7]

## இன்று வட்ட ரீதியாக உண்ணாவிரத நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஏப். 17

தியாகச்சுடர் அன்னை பூபதியின் ஏழாம் ஆண்டு நினைவாக இன்றும், நாளையும் வட்ட ரீதியாக மக்கள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்க உள்ளனர்.

நாளை மறுதினம் புதன்கிழமை உண்ணாவிரத நிகழ்வுகள் கோட்ட ரீதியாக நடைபெறும்.

உண்ணாவிரதம் குறிக்கப்பட்ட இடங்களில் காலை ஏழு மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்.

இன்று வட்ட ரீதியாக உண்ணாவிரதம் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு;

யாழ். கன்னாதிட்டி காளி கோவில், திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில், நீர்வேலி கந்தசுவாமி கோவில், மயிலணி முருகமூர்த்தி கோவில், மாகியப்பிட்டி இரட்டையபுலம் வயிரவர் கோவில் ஆகியவற்றின் முன்றில்—

சித்தன்கேணி பிள்ளையார் கோவில் முன்றில், நாவற்குழி அப்பன் குடியிருப்பு, கைதடி முத்துக்குமாரசாமி ம. வி., சிட்டிபுரம் அம்மன் கோவில் முன்றில், மட்டுவில் வளர்மதி சனசமூகநிலையம்—

இத்தாவில் குணா அறிவகம், உடுப்பிட்டிச் சந்திப் பொதுப் பந்தல், அல்வெல்லை இளைஞர் ச.ச. நிலையம், அல்வாய் மாலிச் சந்திப் பிள்ளையார் கோவில் முன்றில், நாவற்குழி லவநிதா குடியிருப்பு.

## பலாலியில் இரு படையினர் பலியானது பற்றிவிசாரணை

கொழும்பு, ஏப். 17

பலாலி முகாமுக்கு அருகே அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரு படையினர் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு காரணம் விடுதலைப் புலிகளா, அல்லது மூன்றாம் படையா, அல்லது இராணுவத்தினரிடையேஏற்பட்ட உட்பிணக்கா என்பது குறித்து ஆராயப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

"சண்டே ரைம்ஸின்" ஆசிரிய தலையங்கத்தில் இத்தகவல் வெளியாகியுள்ளது.

## ஜனாதிபதி ஆட்சிமுறையை நீடிக்க அரசு தீர்மானம்

கொழும்பு, ஏப். 17

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை தொடர்ந்து நீடிக்கும்

— கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கிறது.

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கும் வகையில் புதிய அரசமைப்புச் சட்டம் ஜூலை 15இற்கு முன்னர் கொண்டு வரப்படும் என சந்திரிகா அரசு முன்னர் அறிவித்திருந்தது தெரிந்ததே.

நாட்டில் சமாதானத் தீர்வு ஒன்று ஏற்பட்ட பின்னர், அந்தத் தீர்வு தொடர்பான ஏற்பாடுகளும் உள்ளடங்கியதான அரசமைப்பு ஒன்றை நடைமுறைக்குக் கொண்டுவருவது என்றும் —

அதுவரை நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையைக் கொண்ட தற்போதைய அரசமைப்புத் தொடர அனுமதிப்பது என்றும் —

அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-ஐ)

## குன்றக்குடி அடிகளார் முத்திப்பேறு அடைந்தார்

சிறந்த தமிழறிஞரும், குன்றக்குடி மடத்தின் 45 ஆவது மடாதிபதியுமான தவத்திரு குன்றக்குடி அடிகளார் கடந்த சனிக்கிழமை இரவு முத்திப்பேறு அடைந்தார்.

அவருக்கு வயது 70

இருதயநோய்ச் சிகிச்சைக்காக நான்கு நாட்களுக்கு முன்னர் அவர் மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டிருந்தார்.

சமய சார்பற்ற போதனைகள் செய்வதன் மூலம் குன்றக்குடி அடிகளார் அனைத்து சமய மக்களின் அன்பையும் நன் மதிப்பையும் பெற்றிருந்தார்.

தமது குன்றக்குடி கிராமம் முன்னோடியாக திகழ்வதற்கு அவர் அரும்பணி ஆற்றியிருந்தார்.

அவரின் பூதவுடல் பொது

(6 ஆம் பக்கம் பார்க்க)

*சிறப்புச் செய்தி*

# ஜனாதிபதியின் பதில் கடிதம் புலிகளுக்கு திருப்தி தரவில்லை!

## செய்திச் சாரம்

### அஷ்ரப் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 17

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்கப்பட்டால் அரசில் இருந்து விலகிவிடப்போவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான எம் எச்.எம். அஷ்ரப் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றைய 'சண்டே லீடர்', வார இதழ் இவ்வாறு தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

### கிளிநொச்சியில் புக்காரா மிரட்டல்

யாழ்ப்பாணம், ஏப். 17

"புக்காரா" விமானம் ஒன்று நேற்றுக் காலை சுமார் இரண்டு மணி நேரம் கிளிநொச்சிப் பகுதியில் தாளப் பதிந்தும் உயரப் பறந்தும் வட்ட மிட்டதுடன் குண்டு வீசுவது போன்று குத்திப் பதிந்தும் மக்களை அச்சுறுத்தியது.

இதனால் அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவியது.

அண்மையில் ஹெலிக்கொப்டர் ஒன்றும் கிளிநொச்சிப் பகுதியை நீண்ட நேரம் வட்டமிட்டு நோட்டமிட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

### படையினர் நடவடிக்கை தீவிரம்

யாழ்ப்பாணம், ஏப் 17

குடாநாட்டு வான்பரப்பிலும் கடற் பரப்பிலும் படையினரின் கலங்களின் போக்குவரத்து அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலாலி கூட்டுப் படைத்தளத்தில் அதிக எண்ணிக்கையான விமானங்கள், ஹெலிகள் அடிக்கடி தரையிறங்கிச் செல்கின்றன.

தமிழீழக் கடற்பரப்பிலும் ஸ்ரீலங்கா கடற்படைக் கப்பல்கள் ஓடித்திரிவது அதிகரித்திருக்கிறது. (உ-7)

### முச்சந்தி முரளி



அப்ப தைப்பொங்கலோடை வந்தது சித்திரையோடை போகுது போல

## அரசின் மழுப்பல் நிலைப்பாடு அமைதி முயற்சிக்கு குந்தகமாகலாம்

— உதயன் அரசியல் செய்தியாளர் —

யாழ்ப்பாணம், ஏப்ரல். 17

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பான நான்கு விடயங்கள் குறித்து சந்திரிகா குமாரதுங்க தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு அனுப்பியுள்ள பதில் கடிதம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அடியோடு திருப்தி தரவில்லை எனத் தெரியவருகின்றது.

தமிழீழத் தேசியத் தலைவர் திட்டவட்டமாகக் குறிப்பிட்டு சுட்டிக்காட்டியுள்ள இந்த நான்கு விடயங்கள் குறித்தும் ஸ்ரீலங்கா அரசு மழுப்பல் பதில் ஒன்றை அனுப்பியிருப்பது அடுத்து வரும் தினங்களில் அமைதி நிலை குலைந்து போவதற்கு அடிகோலிவிடக் கூடும் எனவும் கருதப்படுகின்றது.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தீர்ப்பது சம்பந்தமான இந்த நான்கு விடயங்கள் தொடர்பாகவும், கடந்த புதனன்று ஜனாதிபதி சந்திரிகா தலைவர் பிரபாகரனுக்கு எழுதியுள்ள கடிதம் இந்த விடயங்களில் அரசின் பிடிவாதப் போக்கு மாற்றமடையவில்லை என்பதையே காட்டுவதாக விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக தலைவர் திரு. பிரபாகரன் அரசுக்கு வழங்கியிருந்த கால அவகாசம் நாளை மறுதினம் புதன்கிழமையுடன் முடிவடைகின்றது

ஆனால் ஜனாதிபதி அறிவித்த வேகத்தில் பொருளாதாரத் தடைத் தளர்வு நடை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உதவும் நாடுகள் கூட்டம் நடைபெறும் வரை காலத்தை இழுத்தடிக்கும் அரசின் திட்டத்துக்கு புலிகள் இடமளிக்க மாட்டார்கள்

யாழ்ப்பாணம், ஏப். 17

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பான நான்கு விடயங்கள் சம்பந்தமாகவும் ஜனாதிபதி சந்திரிகா, தெரிவித்திருக்கும் பதில், காலத்தை இழுத்தடிக்க அவர் திட்டமிடுவதையே காட்டுவதாகப் புலிகள் கருதுகின்றனர்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்களில் இருந்து இது தெரியவந்தது.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில் பாரிஸில் நடைபெறவிருக்கின்றது.

விடுதலைப் புலிகளுடன் சமாதானத் தீர்வு காண்பதற்கான அமைதி முயற்சிகளில் அரசு ஈடுபட்டிருக்கின்றது என உதவும் நாடுகளுக்குக் காட்டி அதன், மூலம், அதிக நிதி உதவியைப் பெற்றுக் கொள்ள அரசும் ஜனாதிபதியும் விரும்புகின்றனர்.

எனவே அதுவரை சமாதான முயற்சிகள் முறிந்து விடாமல் நிலைமையைச் சமாளிக்க — காலத்தை இழுத்தடிக்க — ஜனாதிபதி முயற்சிக்கின்றார். அத்தோடு பாரிஸ் மற்றும் இந்தியாவுக்கான தமது விஜயத்தின் போது நாட்டில் தனது அரசு தொடர்ந்து அமைதியைப் பேணுவதாக அந்த நாடுகளில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோல், டீஸல் எடுத்து வருவதற்கு நேற்று வரையும் அனுமதி இல்லை!

### வர்த்தமானி அறிவித்தலும் இன்னும் வரவில்லை

வவுனியா, ஏப். 17

இராணுவத் தொடர்புள்ள எட்டுப் பொருள்கள் தவிர, பெற்றோல், டீஸல் உட்பட அனைத்துப் பொருள்களையும் வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்கான தடை நீக்கப்பட்டு விட்டதாக ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ள போதிலும் —

நேற்றுவரை பெற்றோல், டீஸல் போன்ற — தடை நீக்கப்பட்ட — எந்தப் பொருளையும் வவுனியா ஊடாக வடக்கே எடுத்துவர படையினர் அனுமதிக்கவில்லை.

பொருளாதாரத் தடைத் தளர்வு தொடர்பான அறிவித்தல் கடந்த வியாழக்கிழமையன்று வெளியானவையோடு அதுபற்றிய வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்படும் என ஜனாதிபதி சந்திரிகா தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பிய கடிதத்தில குறிப்பிட்டிருந்தது தெரிந்ததே

ஆனால் நேற்று இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை அத்தகைய அறிவித்தல் ஏதும் வெளியாகவில்லை.

இந்த வர்த்தமானி அறிவித்தல் இன்று வெளியாகக் கூடும் என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. [உ 9]

## சமாதான முயற்சிகளின் போது ராணுவ நிலைப்பாடு பாதகமானது

### விக்டர் ஐவன் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 17

சமாதான முயற்சிகளை இராணுவ நிலைப்பாட்டில் இருந்துகொண்டு செயற்படுத்துவது பாதகமானதாகும்.

[illegible] ஆசிரியர் திரு. விக்டர் ஐவன் [illegible] தெரிவித்துள்ளார்.

எரிபொருள் மீன்பிடித் தடைகளைத் தளர்த்திய அரசின் நடவடிக்கை சமாதான முயற்சிக்கு உந்துதலாகவே இருக்கும். என்னும் ஒட்டு மொத்தமாகப் பார்க்குமிடத்து சமாதான முயற்சிகளை அரசு இராணுவ நிலைப்பாட்டில் அல்லாது அரசியல் நிலைப்பாட்டில் இருந்தே செயற்படுத்தவேண்டும்.

பூநகரியாவை விடுதலைப் புலிகள் குண்டு தயாரிக்க பயன்படுத்துவர் என்று கருதியே முன்னைய அரசு அதைத் தடை செய்தது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சாரம்

### பௌஸி குழு யாழ் வர முயற்சி

கொழும்பு, ஏப். 17

சுகாதார அமைச்சர் ஏ.எச். எம் பௌஸி தலைமையில் முஸ்லிம் தூதுக்குழு ஒன்று யாழ்ப்பாணம் செல்ல ஜனாதிபதியிடம் அனுமதி கோரியுள்ளது.

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள 30 முஸ்லிம்களை விடுவிப்பதும் நல்லெண்ண நடவடிக்கையும் இவ்விஜயத்தின் நோக்கம் ஆகும் என்று 'சண்டே லீடர்' பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஐ)

### அதி சக்திமிகு சாதனம் பிடிபட்டது

கொழும்பு, ஏப் 17

அதி உயர் சக்தி மிக்க மோட்டரோலா தொலைத்தொடர்பு சாதனம் ஒன்று புதுவருட தினத்தன்று காலையில் கொழும்பில் கைப்பற்றப்பட்டதாக "சண்டே ஐலண்ட்" செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

### குப்பை தொட்டியில் விஷ வாயு

சென்னை, ஏப். 17


சென்னையில் திரையரங்கு ஒன்றின் குப்பைத் தொட்டியைச் சுத்தஞ் செய்து கொண்டிருந்த மூவர் மூச்சுத் திணறி உயிரிழந்துள்ளனர்.

தொட்டியிலிருந்து வெளியேறிய விஷ வாயுவின் தாக்கத்தினாலேயே இம் மூவரும் உயிரிழந்ததாக சென்னைப் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (உ-7)

### ஜெரியின் பதவிக்காலம் நீடிப்பு?

கொழும்பு, ஏப். 17

இராணுவத் தளபதி ஜெரி டி சில்வாவின் பதவிக்காலம் மேலும் இரு வருடங்களுக்கு



நீடிக்கப்பட்டுள்ளதாக அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தென் இந்தியத் திருச்சபை யாழ். ஆதீனம்
தொழிற்பயிற்சி நிலையம், பண்டத்தரிப்பு

## பொருட்காட்சி

I. தையல  IV. சிகை அலங்காரம்
II. ஐசிங்கேக்  V. பன்ன வேலை
III. பூ வேலை  VI. தும்பு வேலை

மேற்படி பொருட்காட்சி ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி காலை 9மணிக்கு பேரருட்திரு. அறிவர் S. ஜெபநேசன் அவர்கள் தலைமையில் நடைபெறும். திருமதி V. ஜெபநேசன் அவர்கள் சான்றிதழ்கள் வழங்குவார். இதனைத் தொடர்ந்து அடுத்தநாளும் பொருட்காட்சி நடைபெறும்.

இடம்: மாதர் கிராம முன்னேற்றச் சங்கம். சித்தன்கேணி.

(சி/1024)

---

உதயதாரகை சனசமூக நிலையம்
ஆனைக்கோட்டை
14 – 04 – 95 அன்று புத்தாண்டு நிகழ்வாக நடைபெற்ற

## சீட்டிழுப்பு முடிவுகள்

பரிசுபெற்றோர் விவரம்

1ஆம் இடம் — 1838  2ஆம் இடம் — 466
3ஆம் இடம் — 1394

ஆறுதல் பரிசு:

| | |
|---|---|
| 1ஆம் இடம் — 2307 | 6ஆம் இடம் — 1560 |
| 2ஆம் இடம் — 2237 | 7ஆம் இடம் — 2070 |
| 3ஆம் இடம் — 986 | 8ஆம் இடம் — 427 |
| 4ஆம் இடம் — 1296 | 9ஆம் இடம் — 1199 |
| 5ஆம் இடம் — 522 | 10ஆம் இடம் — 2340 |

மரதன் ஓட்டத்தில் பரிசு பெற்றோர் [5மைல்]

1ஆம் இடம் — கோபாலப்பிள்ளை ரமேஸ், ஆனைக்கோட்டை.
2ஆம் இடம் — பொன்னப்பா சுகுணதாஸ், ஆனைக்கோட்டை.
3ஆம் இடம் — பொன்னம்பலம் பாஸ்கர், ஆனைக்கோட்டை.

குறிப்பு: 30-05-95ஆம் திகதிக்கு முன்னர் உங்கள் பரிசுகளை பெற்றுக் கொள்ளவும்.

நன்றி;
- கௌரவசெயலாளர்.

[36264]

---

# நியூட்டன் அக்கடமி

இருபாலை வீதி, கோண்டாவில்.

## O/L DAY CLASS

★ கடந்த ஆண்டு 99% மாணவர்களை சித்தியடைய வைத்த அதே தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு.

| | |
|---|---|
| கணிதம் | — S. கருணாகரன் |
| விஞ்ஞானம் | — இரா. அருட்செல்வம் |
| தமிழ் | — S வேல்நம்பி |
| சமூகக்கல்வி | — இரா. கணேஷ் |
| ஆங்கிலம் | — S. சந்திரமௌலி |
| வர்த்தகம் | — பிரபல ஆசிரியர் |
| சமயம் | — பாஸ்கரன் |

★ கணிதம் வாரத்தில் 8மணித்தியால வகுப்பு
★ 9, 10, 11 பாடத்திட்டத்துடன் அடிப்படையிலிருந்து ஆரம்பம்.

ஆரம்பம்: 20 - 04 - 1995
வியாழன் காலை 8 மணி

[36268]

---

பண்டத்தரிப்புக் கோட்ட
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
நடத்தும்

## தியாகத்தாய் அன்னை பூபதியின் 7-ம் ஆண்டு நினைவு விழா

இடம்: சித்தன்கேணி பிள்ளையார் கோயில் முன்றில்

காலம்: 17 – 04 – 95 திங்கள் மாலை 5-30 மணி

நினைவுப் பேருரைகளும், கலை நிகழ்வுகளாக
★ நடனம் ★ வில்லிசை
★ பட்டி மண்டபம் ★ நாடகங்கள்
இடம்பெறும்.

இன்றைய தினம் 17 - 04 - 95 மாலை 3-00மணியுடன் வகுப்புக்களை நிறுத்தி, அனைத்து உறுப்பினர்களையும், ஆசிரியர்களையும், மாணவச் செல்வங்களையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு:

மேற்படி ஆலய முன்றிலில் 18 - 04 - 95 செவ்வாய் காலை 8-00 மணிக்கு நடைபெறும் உண்ணாவிரதத்தில் எமது உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும். இவ் உண்ணா நோன்பில் கலந்து கொள்வதற்காக 18 - 04 - 95 செவ்வாய் எமது கோட்டத்திற்கு விடுமுறை நாளாகும்.

இ. வசந்தகுமார் — தலைவர்
கு. நடேஸ்வரன் — செயலாளர்

[சி-1028]

---

# I.A.S. ஆவரங்கால்

## A/L 97 கலை வர்த்தக வகுப்புக்கள்

ஆரம்பம்:- 18 - 04 - 95
செவ். காலை 7 மணி

| | |
|---|---|
| பொருளியல் | — இராஜேஸ்வரன் |
| கணக்கியல் | — கலைச்செல்வன் |
| வர்த்தகம் | — சிவப்பிரகாசம் |
| அளவையியல் | — ஜெயராஜ் |
| புவியியல் | — நித்தி |
| தமிழ், இந்து சமயம் | — கோப்பாய் சிவம் |
| இந்து நாகரிகம் | — ஸ்ரீ |
| வரலாறு | — பிரபா |

## O/L DAY CLASS

ஆரம்பம் நாளை 18 - 04 - 95 செவ் காலை 10 மணி

(36278)

---

## காரை நல்லியக்க சபையே வாழி!

கல்வி வளம் கலை வளத்தை காத்த அன்னாய்
காரைநகர் மாணவர்க்கு உழைத்த தாயே!
வெள்ளி விழா காணுகின்ற நல்லியக்க சபையே
விரும்பியுன்னை வாழ்த்துகிறேன் புத்தாண்டில்–
பொழிந்து வாழி!

காரைநகர்
எம். பி அருளானந்தன்.

[36272]

---

## தீராந்தி மரங்கள் தேவை

குண்டு வீச்சினால் பாதிப்படைந்துள்ள புனித யாகப்பர் ஆலய கூரை வேலைகளுக்கு அன்பளிப்பாகவும், விலைக்கும் பெற்றுக் கொள்ள தீராந்தி மரங்கள் உடன் தேவை.

தொடர்பு கொள்ளவும்:

பங்குத் தந்தை,
புனித யாகப்பர் ஆலயம்,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

(சி-1029)

---

சர்வதேச தொழில் ஸ்தாபனமும், அகில உலக கூட்டுறவு இணைப்பு நிறுவனமும்
இணைந்து நடத்திய

## நவீன ஆளணி கொள்கை தொடர்பிலான வேலைக்களம் சார்ந்த பரீட்சார்த்த வேலைக்களம்

18 – 04 – 1995

இடம்: யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபம்

காலம்: 18 – 04 – 1995 செவ்வாய்க்கிழமை காலை 8 30 மணி — 4-30 மணி

தலைவர்: திரு. வை. செந்திநாதன் அவர்கள் (தலைவர் யா. மா. கூ. சபை)

விடயம்:

### நவீன ஆளணிக்கொள்கை

ஆரம்பித்து வைப்பவர்:
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
(கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

வள அணியாளர்:
திரு. சி. யோகேஸ்வரன் அவர்கள்
(முகாமை உசாத்துணைவர், இலங்கை கூட்டுறவு முகாமை நிறுவனம்)

பங்குபற்றுவோர்:
சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்க, பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க, இரண்டாம்படிச் சங்க பொது முகாமையாளர்களும், நிரந்தர ஆளணி முகாமையாளர்களும் பங்குபற்றுவோர் தவறாது குறித்த நேரத்திற்கு சமுகமளிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்

– மாவட்டச் செயலாளர்.

மாவட்டக் கூட்டுறவுச் சபை,
இல. 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-1025]

---

# A/L 97

PURE / APP
Mr. P. கமலசிங்கம்
B Sc (Hons)

ஆரம்பம்
21 - 4 - 95
வெள்ளி - 12.00 ந. ப.

PHYSICS
Mr. மோகன்
B Sc

CHEMISTRY
Mr. மகேஸ்வரன்
B Sc (Hons)

## SHAMROCK

யாழ். சுண்டுக்குளி

(36275)

---

## தேவை

தனியார் கல்வி நிறுவனமொன்றில் பணியாற்றுவதற்கு பெண் லிகிதர் தேவை. A/L கல்வித் தகைமையுடையோர் 21 – 04 – 1995 வெள்ளி காலை 10-00 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

BECON
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-1016]

---

## கலை வர்த்தக கல்லூரி

C. C. A.
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

A/L 95
பகல்நேர வகுப்பு
[Day Class]
வர்த்தகமும் நிதியும் மீட்டல் வகுப்பு

ஆசிரியர்
திரு. க. சத்தியதாசன்

ஆரம்பம்:
17 - 04 - 95 (திங்கள்)
நேரம்: 11 — 12

வாரத்தில் நான்கு நாட்கள் வகுப்புக்கள் நடைபெறும்.

நிர்வாகி.

[சி-1008]

---

## சிவாகி

கல்வி நிலையம்
சாவகச்சேரி.

97 கலை வர்த்தக வகுப்புகள்

எமது வழமையான ஆசிரியர் குழுவினால் ஆரம்பமாகின்றன.

1995 - 04 - 20
வியாழன் காலை 8-00

(8325)

---

# ஐடியல் கல்வி நிலையம்

நீர்வேலி.

## A/L கலை, வர்த்தக 97 வகுப்புக்கள்

ஆரம்பம்: 21 - 04 - 1995 பி. ப. 2-00 மணி

| | | | |
|---|---|---|---|
| பொருளியல்: | திரு இராஜேஸ் | புவியியல்: | திரு. விக்னேஸ்வரன் |
| வர்த்தகம்: | பிரபல ஆசிரியர் | அளவையியல்: | திரு. சிலன் |
| கணக்கியல், தமிழ் | திரு. வேல்நம்பி | இந்துநாகரிகம், இந்துசமயம் | திரு ஆனந்த் |


95, 96 வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

(36259)

---

மூளாய்
வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தானம்

## கௌரவிப்பு



மேற்படி தேவஸ்தான மஹோற்சவ காலத்தில் 4 - 4 - 95 — 16-4-95 வரை ''கம்பராமாயணம்'' என்னும் தொடர் தெய்வீக பேருரை நிகழ்த்திய —

''வாகீச கலாநிதி''

### கனகசபாபதி நாகேஸ்வரன்

B. A. (Hons) M. A

அவர்களைப்பாராட்டி அடியார்களும் இந்து இளைஞர் மன்றத்தினரும் உபயகாரர்கள், பரிபாலன சபையினர் சார்பில்—

''நவரசக் கலைஞானி''

என்னும் பட்டம் அளித்து பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கும் கௌரவிப்பு நிகழ்வு நேற்று (16-4-1995) மேற்படி தேவஸ்தானத்தில் நடைபெற்றது.

''சித்தி விநாயகர் கருணை மகத்தானது''

இந்து இளைஞர் மன்றம், உபயகாரர்
மூளாய் பரிபாலன சபை

விளம்பர அன்பளிப்பு:
செந்தில் களஞ்சியம்
மூளாய்

(36277)

---

யா/ புங் - ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்
பழைய மாணவர் சங்கம்

## ★ வாழ்த்துகின்றோம் ★

1994 இல் நடைபெற்ற க. பொ. த. (சா/ த) பரீட்சையில் வேலணைக் கல்விக் கோட்டத்திலேயே அதிகூடிய பெறுபேற்றினைப் பெற்ற எமது பாடசாலை மாணவனாகிய பூபாலசிங்கம் தயானந்தன் அவர்களையும், அவருடன் சித்தியெய்திய ஏனைய மாணவர்களையும் அதற்கு வழிசமைத்த வித்தியாலய அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யா/ புங்- ஸ்ரீகணேச மகா வித்தியாலயம்

(36276)

---

## சேவை நலம் பாராட்டுகின்றேன்

காரைநகர் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இருபத்தைந்து ஆண்டுகள் சேவை செய்து இன்று வெள்ளி விழாக் காணும் வேளையில் —

### திரு ச. பத்மநாதன் (பட்டு மாமா)

[செயலர் நல்லியக்க சபை காரைநகர்]

அவர்களையும் குடும்பத்தினரையும் இன்னும் பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அன்பு மாணவன்
ச. பிரணவரூபன்

(36280)

---

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
மருதனார்மடம் கோட்டம்

## தியாகி அன்னை பூபதி தினம்

இடம்;
நடராஜா இராமலிங்க வித்தியாலயம், ஆவரங்கால்

காலம்:
இன்று (17-04-1995) திங்கள் மாலை 6 மணி

நிகழ்ச்சிகள்

1. அகவணக்கம்
2. ஈகச்சுடர் ஏற்றல்
3. தலைமையுரை; திரு. ச. குகன்
4. வரவேற்புரை; திரு. ஸ்ரீஸ்கந்தராஜா
5. சிறப்புரை: திரு. முருகன் (மாணவர் அமைப்பு)
6. நாட்டிய நாடகம்
7. சின்னமணி குழுவினரின் வில்லுப்பாட்டு
8. நன்றியுரை

குறிப்பு;

இன்று மருதனார்மடக் கோட்ட தனியார் கல்வி நிலைய ஒன்றிய உறுப்பினர்கள் யாவரும் விழாவில் கலந்துகொள்ளவும். இன்றைய தினம் சகல வகுப்புகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

ந. நவரட்ணராஜா — செயலாளர்
K.A. விக்னா — தலைவர்

[சி/1033]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் திரும்பும் அகதிகளை மீளக் குடியமர்த்த நடவடிக்கை

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொள்ளும்

யாழ்ப்பாணம், ஏப். 17 தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பிய அகதிகளில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களை இனிமேல் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொறுப்பேற்று அவர்களை சொந்த இடங்களில் குடியமர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் முதற்கட்டமாக வவுனியாவில் இருந்து எதிர்வரும் 26 ஆம் திகதி இங்கு வரவுள்ள மற்றொருதொகுதி அகதிகளை அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரிகளிடமிருந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொறுப்பேற்கும்.

அகதிகள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கான ஏற்பாடுகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகமே மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## வடக்கு - கிழக்கு இணைப்பை லலித் பிரிவினர் எதிர்ப்பர்

கொழும்பு, ஏப்ரல் 17 வடக்கு—கிழக்கு மாகாணத்தை இணைக்கும் எந்த நடவடிக்கையையும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் லலித் பிரிவு எதிர்க்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசு விடுதலைப் புலிகளுடன் நடத்திவரும் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக தமது கட்சியுடன் கலந்துரையாடாதது குறித்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் லலித் பிரிவினர் அதிருப்தி தெரிவித்துள்ளனர் என்று "சண்டே ஒப்சேவர்" செய்தி வெளியிட்டுள்ளது. [ஐ-14]

## தப்பியோடிய படையினரைப் பிடிக்க விசேட பொலீஸ் பிரிவு அமைப்பு

கொழும்பு, ஏப். 17 இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களைக் கைது செய்வதற்காக விசேட பொலீஸ் பிரிவு ஒன்று அமைக்கப்பட இருப்பதாக 'லக்பிம' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இராணுவத்தில் இருந்து இதுவரை சுமார் 25 ஆயிரம் பேர் தப்பி ஓடியுள்ளனர்.

இவர்களில் 4 ஆயிரத்து 500 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

தென்பகுதிகளில் இயங்கும் கொள்ளைக் கோஷ்டிகளிலும், சட்டவிரோதக் குழுக்களிலும் தப்பியோடிய படையினர் செயற்பட்டு வருகின்றனர்.

இத்தகைய குழுக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த பொலீஸார் விசேட நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். [ஐ-14]

## ஜி. சீ. ஈ. மீளாய்வு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஏப். 17 கடந்த வாரம் வெளியான ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை பரீட்சார்த்திகள் அடுத்த மாதம் ஐந்தாம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் என பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார். [ஐ-3]

## சிறிமாவோ லண்டன் செல்கிறார்

பிரதமமந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை லண்டனுக்கு செல்லவுள்ளார்.

மருத்துவ சிகிச்சை பெறுவதற்காகவே இவர் லண்டன் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [ஐ-14]

## சேவைக் கால கருத்தரங்கு

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளின் ஆங்கிலம், விஞ்ஞானம், வர்த்தகம், சித்திரம் ஆகிய பாட ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சிக் கருத்தரங்குகள் இன்று திங்கட்கிழமை முதல் வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளதாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் அறிவித்துள்ளார்.

ஆங்கிலம், வர்த்தகம் ஆகிய பாடங்களுக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும் விஞ்ஞானம், சித்திரம் ஆகிய பாடங்களுக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கருத்தரங்குகள் இடம்பெறும். (ஐ-117)

## 20 ஆயிரம் இலங்கையருக்கு தென்கொரியாவில் வேலைவாய்ப்பு

### சாதகமான சூழ்நிலை என்கிறார் கதிர்காமர்

கொழும்பு, ஏப் 17 சுமார் 20 ஆயிரம் இலங்கையர்களுக்கு தென்கொரியாவில் வேலை வாய்ப்பை ஏற்படுத்தக் கூடிய சாதகமான சூழ்நிலைகள் காணப்படுகின்றன என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் கதிர்காமர் வெளிவிவகார அமைச்சுக் கட்டடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தினார்.

அம்மாநாட்டிலேயே தென்கொரிய தொழில் வாய்ப்பு மற்றும் முதலீடுகள், வர்த்தகம் என்பன குறித்து அவர் விளக்கமளித்தார்.

வேலைவாய்ப்பு பற்றி அமைச்சர் கதிர்காமர் தெரிவித்ததாவது: தென்கொரியா இலங்கையிலிருந்து ஆயிரக்கணக்கில் தொழிலாளர்களைப் பெறுவதில் ஆர்வம் காட்டுகிறது.

கடந்த மாதம் கொப்பன்ஹேகனில் இலங்கை ஜனாதிபதிக்கும், தென்கொரிய ஜனாதிபதிக்குமிடையே வேலைவாய்ப்புகள் தொடர்பாக ஆராயப்பட்டது. அச்சமயம் பதினாயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கத் தயாராக இருப்பதாக தென்கொரிய ஜனாதிபதி எமது ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தார். ஆயினும் தென்கொரியாவினால் இருபதினாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை வழங்க முடியுமென நான் கருதுகிறேன்" என்று அமைச்சர் தெரிவித்தார். (ஒ-4)

## அன்னை பூபதி நினைவு பொது அறிவுத் தேர்வு தேசிய மட்டத்தில் பரிசு பெறுவோர் விவரம்

அன்னை பூபதி ஞாபகார்த்தமாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் நடத்திய பொது அறிவுத் தேர்வில் தேசிய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்று தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை பரிசாகப் பெறும் மாணவர்களின் விவரம் வருமாறு:-

| ஆண்டு | பெயர் | பாடசாலை | கோட்டம் | புள்ளி |
|---|---|---|---|---|
| ஆண்டு 6 | விவேகானந்தன் கோகுலன் | யாழ். இந்துக்கல் ரி | நல்லூர் | 100 |
| ஆண்டு 6 | சாலினி சின்னத்தம்பி | சுண்டிக்குளி மகளிர் | யாழ்ப்பாணம் | 86 |
| ஆண்டு 6 | இலட்சுமணசர்மா கேதாரசர்மா | யாழ் இந்துக்கல்லூரி | நல்லூர் | 81 |
| ஆண்டு 7 | ம. தேவகுமரன் | திருவையாறு ம. வி | கரைச்சி | 95 |
| ஆண்டு 7 | விஸ்வநாதன் விபுலன் | யாழ். இந்துக்கல்லூரி | நல்லூர் | 91 |
| ஆண்டு 7 | கனகசபாபதி வாசுதேவா | வட்டு யாழ்ப்பாணக்கல்லூரி | சங்கானை | 83 |
| ஆண்டு 8 | தில்லைநாதன் கோபிநாத் | யாழ் இந்துக்கல்லூரி | நல்லூர் | 86 |
| ஆண்டு 8 | பரராஜசிங்கம் நந்தகுமார் | யாழ். இந்துக் கல்லூரி | நல்லூர் | 85 |
| ஆண்டு 8 | யோகேஸ்வரன் திவாகர் | மானிப்பாய் மெமோறியல் | சண்டிலிப்பாய் | 84 |
| ஆண்டு 9 | புவனேந்திரன் நிதர்சன் | யாழ். இந்துக் கல்லூரி | நல்லூர் | 92 |
| ஆண்டு 9 | சிவகுமாரன் கிருஷ்ணகுமாரன் | யாழ் இந்துக் கல்லூரி | நல்லூர் | 89 |
| ஆண்டு 9 | புவனேந்திரன் ஈழநாதன் | உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் | கரவெட்டி | 85 |
| ஆண்டு 10 | அருளம்பலம் டானியல்சுரேந்திரன் | யூனியன் கல்லூரி | தெல்லிப்பழை | 93 |
| ஆண்டு 10 | ஆனந்தலிங்கம் சதீஸ் | யாழ். இந்துக் கல்லூரி | நல்லூர் | 92 |
| ஆண்டு 10 | குமாரசாமி யதுநந்தன் | கொக்குவில் இந்துக் கல்லூரி | நல்லூர் | 84 |
| ஆண்டு 11 | தங்கராஜா பிரதீபன் | ஹாட்லிக் கல்லூரி | பருத்தித்துறை | 88 |
| ஆண்டு 11 | திருநாவுக்கரசு பாலமுருகன் | பரியோவான் கல்லூரி | யாழ்ப்பாணம் | 87 |
| ஆண்டு 11 | நடராஜா சந்திரகாசன் | ஹாட்லிக் கல்லூரி | பருத்தித்துறை | 82 |
| ஆண்டு 12/13 | துரைராஜா பிரசாந்தன் | யாழ். இந்துக் கல்லூரி | நல்லூர் | 88 |
| ஆண்டு 12/13 | சிவானந்தன் சசிகரன் | யாழ். இந்துக் கல்லூரி | நல்லூர் | 84 |
| ஆண்டு 12/13 | யோகராஜா சிவாகரன் | யாழ். இந்துக் கல்லூரி | நல்லூர் | 83 |

## அன்னை பூபதி பொது அறிவுத்தேர்வு கோட்ட மட்டத்தில் முதல் 3 இடங்கள்

அன்னை பூபதி நினைவாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் நடத்திய பொது அறிவுத் தேர்வில் கோட்டமட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**நல்லூர் கோட்டம்**

ஆண்டு 6

பழனிமலை நாதன் சைலஜன் (யாழ் இந்து), சுந்தரமூர்த்திமாறன் (யாழ் இந்து), பாலகிருஷ்ணன் கோகுலன் (யாழ். இந்து)

ஆண்டு 7

தேவராசா வாகீசன் [யாழ். இந்து), மகாலிங்கம் தயாகரன் [யாழ். இந்து], இரத்தினம் செந்தில்மாறன் [யாழ். இந்து]

ஆண்டு 8

தங்கராஜா மருதராஜன் [யாழ். இந்து], தேவராஜன் தபேந்திரா [யாழ். இந்து], நற்குணநாதன் ஐங்கரன் (யாழ். இந்து]

ஆண்டு 9

சிவகுருநாதன் செந்தூரன் [யாழ். இந்து), சண்முகநாதன் உஷாந் (யாழ் இந்து), நாகராஜா நேரு [யாழ். இந்து),

ஆண்டு 10

நடராசா நிமலராசா [யாழ். இந்து), நடேசன் சிவாசுதன் [யாழ். இந்து], முத்துலிங்கம் ஞானரூபன் [யாழ். இந்து]

ஆண்டு 11

கிருஷ்ணபிள்ளை குருபரன் [யாழ் இந்து]. குணரட்ணம் செந்தீபன் [யாழ். இந்து], கருணேந்திரன் கருணராஜ் [கொக்குவில் இந்து]

ஆண்டு 12/13

சிவராஜசிங்கம் ஜெயகாந்த் [கொக்குவில் இந்து], பத்மநாதன் கஜன் [யாழ். இந்து), நடராஜா ஜெயகரன் (யாழ். இந்து] சிவானந்தன் சிவோதயன் [யாழ். இந்து]

**ஊர்காவற்துறைக் கோட்டம்**

ஆண்டு 8

யசோதா சபாநடேசன் (கலாநிதி ஆ. தியாகராசா ம. ம.வி.), நிர்மலாதேவி ஜேம்ஸ் (கரம்பன் சண்முகானந்தா ம. வி.)

ஆண்டு 9

தங்கவேல சிவரூபன் (யாழ்ரன் கல்லூரி), டயானா எட்வேட் (கரம்பன் சண்முகானந்த ம. வி)

ஆண்டு 10

பிரதாயினி பத்மநாதன் (சண்முகானந்தா மகா. வி.), யசோதா செல்வரட்ணம் (கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வி.), மரீனா ஜெனிற்றா அந்தோனிப்பிள்ளை (கரம்பொன் சிறிபுஷ்ப மகளிர். ம. வி.)

ஆண்டு 11

விமலரகுசா யோசவ் (கரம்பன் சண்முகானந்தா. ம. வி.) மார்க்கண்டு சதீசன் (கரம்பன் சண்முகானந்தா. ம. வி)

**மருதங்கேணிக் கோட்டம்**

ஆண்டு 6

அரியகுமார் ஸ்ரீகரன் (ஆழியவளை சி. சி. த. க)

ஆண்டு 7

புஸ்பலிகியா கணபதிப்பிள்ளை (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா. வி.)

ஆண்டு 8

பஞ்சநாதன் விஜிதன் (மருதங்கேணி இ. த. க. பா), சித்திரா அமிர்தலிங்கம் (நாகர்கோவில் ம. வி)

ஆண்டு 10

வாரித்தம்பி கிருஷ்ணாகரன் (ஆழியவளை சி. சி. த. க.) ஜெயந்தினி உலோகநாதன் மருதங்கேணி இ. த. க.) நவரத்தினம் சுகுமார் (ஆழியவளை சி. சி. த. க.)

ஆண்டு 11

கனகரத்தினம் ரமணன் (ஆழியவளை சி. சி. த. க) நாகேசுவரா அமுதகாசன் (ஆழியவளை சி. சி. த. க) பசுபதி சிவானந்தன் (ஆழியவளை சி. சி. சி. த. க)

**சங்கானைக் கோட்டம்**

ஆண்டு 7

பாலசுப்பிரமணியம் ஜெயந்தன் வட்டு. (யாழ்ப்பாணக் கல்லூரி), மாணிக்கசிங்கம் செந்தூரன் (வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி), கனகரத்தினம் இதயகுமார் (வட்டு. இந்துக் கல்லூரி).

ஆண்டு 8

ஸ்ரீபாலச்சந்திரன் ஸ்ரீசங்கர் (வட்டு. திருஞானசம்பந்தர் வி.), குணரத்தினம் புவனேசன் (சங்கானை சிவப்பிரகாச ம. வி), கனகரத்தினம் பிரசன்னா (சங்கானை சிவப்பிரகாச ம. வி.).

ஆண்டு 9

தங்கராசா பிரபாகரன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), இராஜசிங்கம் பிரசாந்தன் [வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி], மகாலிங்க சிவம் செந்தில்ரூபன் [சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி]

ஆண்டு 10

நிவேதினி முத்துலிங்கம் [வட்டு. இந்துக் கல்லூரி], வி. சிவாகரன் [வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி], சிவராசா பார்த்திபன் [மூளாய் சைவப் பிரகாச வி.].

ஆண்டு 11

நடராஜா போல் சதீஸ் [வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி], கோமதி ஜெயானந்தசர்மா (மூளாய் சைவப் பிரகாச வி.), சிவசுப்பிரமணியம் செந்தூரன் [வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி]

**வேலணைக் கோட்டம்**

ஆண்டு 7

இராசரத்தினம் பிரதாப் [சேர். வை. து. ம. ம. வி], சுந்தரலிங்கம் பிறேம்நாத் [புங். கமலாம்பிகை வி.].

ஆண்டு 8

பாலசிங்கம் ஜெயதீபன் [வேலணை கிழக்கு ம. வி.].

ஆண்டு 9

பரஞ்சோதி மகாதீபன் [சேர். வை. து. ம. ம. வி.].

ஆண்டு 10

நவரட்ணம் திவாகரன் [புங். கமலாம்பிகை வி.], மகேந்திரராஜா உதயதீபன் [மண்டைதீவு ம. வி.], பத்மநாதன் பத்மகுமார் [புங். கமலாம்பிகை வி.].

ஆண்டு 11

கனகசுந்தரம் சுதன் [மண்டைதீவு ம வி.] திருச்செல்வம் ரவீந்திரன் [சரவணை நாகேஸ்வரி], ரெங்கநாயகி சிதம்பரநாதன் [சரவணை நாகேஸ்வரி].

ஆண்டு 12/13

ரூபகௌரி சிவராசா [மண்டைதீவு ம. வி.]. மதனகௌரி சிவராசா [மண்டைதீவு ம. வி ].

(மிகுதி பின்னர் வெளிவரும்.)

## புலிகளின் குரல் வானொலியில்

**17 — 04 — 1995**

**திங்கள் இரவு**

- ★ 8-02 — தளிர்கள் — சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
- ★ 8-20 — தாயகப்பாடல்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தரிசனம் — பெண் நாதஸ்வர கலைஞர் திருமதி கோபால்—முத்துலட்சுமியுடனான செவ்வி.

**18 — 04 — 1995**

**செவ்வாய் காலை**

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — இன்றைய தாரகை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப்பாடல்கள்

## தமிழீழ வானொலி

**ஒலிபரப்பு**

**திங்கள் மாலை**

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15 — ஆழிபமுகம்
- ★ 5-30 — மாணவர் பக்கம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சிலவினாடிகள்
- ★ 6-02 — நேயர் நெஞ்சம்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — என் தெரிவு

## "சங்கோசை" சிறப்பு மலர் வெளியீடு

கோண்டாவில் கிழக்குஸ்ரீ நாராயணா கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூகநிலையம், மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம், பாலர் பாடசாலை ஆசியவற்றின் 43ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு "சங்கோசை" எனும் சிறப்பு மலர் வெளியிடப்படுகிறது.

"சங்கோசை" சிறப்பு மலரின் வெளியீட்டு விழா இன்று 17ஆம் திகதி பிற்பகல் 5 30 மணிக்கு நிலைய முன்றலில் தலைவர் திரு. அ. ந ஸ்ரீகரன் தலைமையில் நடைபெறும்.

சிறப்பு மலரை வேதாகம கிரியா சிரோன்மணி சிவஸ்ரீ மு. ஜெயந்திநாதக் குருக்கள் வழங்குவார். முதற்பிரதியை கண்வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். குகதாசன் பெற்றுக்கொள்வார்.


**SCIENCE COLLEGE**
**விஞ்ஞானக் கல்லூரி**
பெருமாள் கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

**97-A/L** கணித / உயிரியல் ) பிரிவுகள்
(புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக)

CHEMISTRY — திரு. மகாதேவா B.Sc [Cey.] Dip in-Ed.
PHYSICS — திரு. ஜெயசீலன் B.Sc [Hons] Dip - in- Ed.
RURE-APP — திரு. குணசிங்கம் B. Sc [Hons]
ZOOLOGY — ஈஸ்வரதாசன் B. Sc [Cey.] Dip-in-Ed.
BOTANY — திரு. சிறிகரன் B.Sc [Ce y] Dip-in-Ed.

**P'- NEWSCIENCE CENTRE**
**P'- நியு சயன்ஸ் சென்ரர்**
எழிலகம் முன், யாழ்ப்பாணம்.

**97-A/L** கணித / உயிரியல் ) பிரிவுகள்
(புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக)

ZOOLOGY — திரு. ஈஸ்வரதாசன்
BOTANY — திரு. பாலா
CHEMISTRY — திரு. செல்வா, திரு. மகேஸ்வரன்
PHYSICS — திரு. ஜெயசீலன், திரு. குமரன், திரு. மோகன்
PURE-APP — திரு. குணசிங்கம்
(ச-1013)



உ
சிவமயம்

**திருமண அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் யுவ வருடம் சித்திரை மாதம் (20 - 04 - 1995) வியாழக்கிழமை முற்பகல் 9-37 மணி முதல் 10-49 மணி வரை வரும் மிதுனலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது கனிஷ்ட புதல்வன் திருநிறை செல்வன் **சிவன் அருள்** (Interfuna - Tuttlingen Germany) அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி **பிரமீளா** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசிர்வதித்து விழாவில் கலந்து சிறப்பித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. K. E. அருணாசலேந்திரர், சக குடும்பம், கப்பார் மலை, வல்வெட்டித்துறை.

திரு. ப. சாந்தமூர்த்தி, (பொது சுகாதார பரிசோதகர் - பளை) சக குடும்பம், காந்தி வீதி, வல்வெட்டித்துறை.

(இரு வீட்டார் அழைப்பு)
தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை
[36236]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லின சுருள்முடி Alsation நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ. ரவீந்திரன் ஞானவயிரவர் கோயிலடி, கட்டுடை. (Black&White மைதானம் அருகில்) (36196)

திருநெல்வேலி கலாசாலை வீதியில் வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: A. S. சாந்தன், கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். [8486]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Broiler இறைச்சிக் கோழிக் குஞ்சுகள் Prima Lohmann White வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர் இல: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [36267]

நல்லின இறைச்சி புறொயிலர் குஞ்சுகள் இன்றும், (18-04-95) நாளையும் விநியோகிக்கப்படும் மானிப்பாய் றோட் முதலாம் கட்டை, சிங்கம் வீதி உடுவில். [36269]

### VENUS ANTENNA

To View Ruppavahini, Madras Programmes. Fixing Venus Antenna Repairing Antennas Radios, T. V. Decks, Clocks and Watches. Venus Dilka Watch and Radio Works. 284, Stanley Road (Ariyakulam Junction) Jaffna. Branch: Kandy Road, Chavachcheri. (C-951)

### இறைச்சிக்கோழி விற்பனை

குறைந்த விலையில் புறொயிலர் இறைச்சிக் கோழியும், சேவலும் (ஒன்று ரூபா 100/-) விற்பனைக்குண்டு. இல: 54/2 சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம். [36270]

### MATHS

புலமைப் பரிசில் வகுப்பிலிருந்து, ஆண்டு 11 வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தில், ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 28, வருட அனுபவமுடைய ஆசிரியரினால், 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி [8490]

### மணப் பெண் தேவை

ஐரோப்பிய நாடொன்றில் வேலை பார்க்கும். A/L படித்த 36 வயது, பரணி நட்சத்திர இந்து மதத்தவருக்கு படித்த, சிவந்த, அழகுள்ள மணப்பெண் தேவை. சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். இல: 781 C/o உதயன், யாழ்ப்பாணம் [36263]

### புதுவாண்டுப் பலன்

1995 புது வருஷ எல்லா ராசிப் பலன்களும் வியாழ வக்கிரமும், ரூபா 1/- கணிப்பு (சத்யா) எங்கும் கிடைக்கும். பாடசாலை உபகரணங்களுக்கு ஆனந்த்ஸ் புத்தக நிலையம் 21/B மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [36240]

---

## தென் இந்தியத் திருச்சபை

பேராலயம்

பெண்கள் ஐக்கியம்

நடத்தும்

வட்டுக்கோட்டை தொழிற பயிற்சி நிலையத்தின்

## புதிய வகுப்புகளுக்கான

# அனுமதி

சுருக்கெழுத்து, தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்)

தையல், மனையியல், கைப்பணி

ஆகிய துறைகளில் புதிய ஆறு மாத பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் காரியதரிசியிடம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவும்.

பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

காரியதரிசி,
பெண்கள் ஐக்கியம்,
வட்டுக்கோட்டை. (36224)

---

## தரமான உள்ளூர் தயாரிப்புக்களையே ஊக்குவியுங்கள்!

இதோ! சிறந்த மூலப்பொருட்களை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள

## துர்க்காவின்

### புதிய தயாரிப்புக்கள்

★ கால் நடைகளைத் தாக்கும் உண்ணி, தெள்ளு போன்ற புற ஒட்டுண்ணிகளை வெகு விரைவில அழித்து ஒழிக்கும்

புதிய டிக்கோல் (NEW TICKOL)

★ எறும்பு, கறையான், கோழிப்பேன் வீட்டுத் தோட்டத்தை தாக்கும் பீடைகள்
★ மூட்டைப்பூச்சி
★ ஈ (இலையான்), கரப்பான்

) துர்க்காவின் வீட்டுப் பாவனைக்குரிய பீடை நாசினிகள்

மற்றும்

★ நுளம்பு அகற்றி (MOSQUITO REPELLENT)
★ 100% சுத்தமான குளோரின் தூள் (BLEACHING-POWDER) எமது தயாரிப்புகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள.

தொடர்பு கொள்ளவும்:

சந்தைப்படுத்தும் முகாமையாளர்,
துர்க்கா சந்தைப்படுத்தும் சேவை,
துன்னாலை தெற்கு, கரவெட்டி.

வியாபாரிகளுக்கு விசேட கழிவு

### எங்கள் இதர சேவைகள்:

உங்கள் பொருள்களை சந்தைப்படுத்துவது சிரமமா?
விவசாயம், கால்நடை சம்பந்தமான ஆலோசனை தேவையா?
உடன் மேற்கண்ட முகவரியில் தொடர்புகொள்ளவும்.

உங்கள் தேவை எங்கள் சேவை

பதிவு இல: 0207

✶ வாடிக்கையாளருக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.

[36203]

---

## விரிவுரையாளர் / பதில் போதனாசிரியர்

மேற்படி இருபதவிகளையும் மேற்கொள்ளக் கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றோம்.

முடிவு திகதி: **30 - 04 - 1995**

அதிபர்
லங்கா சித்த ஆயுள்வேத
மருத்துவக் கல்லூரி
127, அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

[36265]

---

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A\L 97 கலை, வர்த்தகம்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | S. வரதராஜன் |
| அளவையியல் | — | S. S மனோகரன் |
| வர்த்தகம் | — | பசில் |
| கணக்கியல் | — | சௌந்தி |
| தமிழ் | — | திருமதி மீரா |
| இந்துநாகரீகம் | — | பாலா |
| இந்துசமயம் | — | தாஸ் |
| அரசியல் | — | பஞ்சாட்சரம் |
| புவியியல் | — | சண் |
| கிறீஸ்தவம் | — | நிரஞ்சன் |
| நாடகமும் அரங்கியலும் | — | சிவா |

**ஆரம்பம்: 06 - 05 - 1995**

சனி 8-00 a. m.

★ இரண்டு பிரிவுகளுக்கு மேல் ஆரம்பிக்கப்பட மாட்டாது.
★ பெயர்களை முன் கூட்டியே பதிவு செய்வதன் மூலம் அனுமதியை உறுதிப்படுத்திக் கொள்ளவும்

(சி/1017)

---

## கடை வாடகைக்கு

நாவலர் தர்மகர்த்தா சபைக்குரிய யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் உள்ள 319ஆம் இலக்கக் கடை வாடகைக்குக் கொடுக்கப்பட இருக்கிறது. குறித்த கடையினை வாடகைக்கு எடுக்க விருப்புபவர்கள் 10-05-1995ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் விலாசத்துக்கு எழுத்து மூலம் தெரிவிக்கவும்.

எஸ். ஏ. துரைராஜா,
செயலாளர் / அதிபர்
நாவலர் தர்மகர்த்தா சபை.

யா / வண் நாவலர் மகா வித்தியாலயம்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம். (36253)

---

### கலை வர்த்தகக் கல்லூரி

# C. C. A.

வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம்.

## A/L - 97

**ஆரம்பம்: 22 - 04 - 1995**

காலை 8-00 மணி

யாழ் நகரில் திறமைவாய்ந்த பட்டதாரி ஆசிரியர்களின் சேவையினை வழங்கும் ஒரே நிறுவனமும் மாற்றமடையும் புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்ப கற்பிக்கும் தகுதி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டதுமான;

### எமது ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல்: | — | திரு. உதயன் |
| கணக்கியல்: | — | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம்: | — | திரு. இரட்ணம் |
| அளவையியல்: | — | திரு. சயந்தன் |
| தமிழ் | — | திரு. கணேஸ் |
| இந்து நாகரிகம் | — | திரு ஜோதீஸ்வரன் |
| புவியியல் | — | திரு. வேலா |
| இந்து சமயம் | — | திரு. ஜோதீஸ் |
| அரசியல் | — | திரு பஞ்சு |
| கிறிஸ்தவம் | — | திரு நோபேட் |
| நாடகமும் அரங்கியலும் | — | திரு. திலகநாதன் |

குறிப்பு:

★ மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளமையால் பதிவு செய்து உங்கள் அனுமதியை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
★ கலை, வர்த்தகத்திற்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் கற்பிக்கப்படுகின்றது.
★ நேர அட்டவணையை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

### மீண்டும ஒரு பிரிவு

**ஆரம்பம்:- 29 - 04 - 1995**

காலை 8-00 மணி

— நிர்வாகி.

[சி-1012]

---

## வாழைச்சருகு வேலிகள்!

யாழ். குடாநாட்டில் வாழைத் தோட்டங்கள் அதிகம் காணப்படும் இடங்களில் வேலிகளுக்கு வாழைச் சருகு பயன்படுத்தப்பட்டு வேலி அமைக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக உரும்பிராய் மற்றும் நீர்வேலி பகுதிகளில் வாழைச்சருகு வேலிபல இடங்களிலும் காணப்படுகிறது.

தற்போது ஒரு மட்டை தென்னோலைக் கிடுகு 12 ரூபா வரை விற்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(ஒ-4)

---

### பச்சிலைப்பள்ளி பகுதியில்

## மலேரியா ஒழிப்பு பற்றி நாளாந்தம் கருத்தரங்கு

தென்மராட்சி ஏப். 17

மலேரியா தடுப்புப் பிரிவினர் பச்சிலைப்பள்ளி பகுதி கிராமங்களில் மலேரியா ஒழிப்பு பற்றிய கருத்தரங்குகளை தினமும் நடத்தி வருகின்றனர்.

பொது இடங்களுக்கு மக்களை வரவழைத்து மலேரியா தடுப்பு முறைகளை அவர்கள் தெளிவாகக் கூறி வருகின்றனர்.

இவ் வருட முற்பகுதியில் இப் பகுதியில் மலேரியா காய்ச்சலினால் ஆயிரக் கணக்கானோர் பாதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஜ-117)

---

## O\L 94 பரீட்சையில் அதியுயர் பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்த எமது மாணவர்களுக்கு பாராட்டுக்கள் பல....

✶ தவறிய அனைவருக்கும் ஓர் அரிய வாய்ப்பு

## O\L 95 DAY CLASS

வாரத்தில் 6 நாட்கள் காலை 8-00 — பி. ப. 1-00வரை

### ஏப்ரல 20இல் ஆரம்பமாகிறது

✶ ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்த மாணவர் குழுவில் தங்களையும் இணைத்து உங்கள் உயர்ந்த எதிர்காலத்தை உறுதிப்படுத்துங்கள்
★ மட்டுப்படுத்திய எண்ணிக்கையான மாணவர்களைக்களைக் கொண்ட 2 பிரிவுகள் மட்டுமே நடத்தப்படும்.

25 ஆவது வெற்றி ஆண்டை நோக்கி இணையற்ற சேவையில்.....

ESTD:-1973 REGD: № J/7993

## The Express Institute

IRUPALAI - KOPAY

(36266)

---

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். கோட்டம்

தியாகச்சுடர்

# அன்னைபூபதி நினைவு விழா

இடம்: யாழ் இரசிக ரஞ்சனசபா மண்டபம் [பெருமாள் கோயிலடி]
காலம்: இன்று [17-04-95] திங்கட்கிழமை மாலை 5-00 மணி

### ★ நிகழ்ச்சி நிரல் ★

★ அகவணக்கம்:
★ மங்கள விளக்கேற்றல்
★ வரவேற்புரை: திரு. த. வரதராஜன் (தலைவர் த. க. நி. ஒன்றியம் யாழ். மாவட்டம்)
★ தலைமையுரை: திரு. இரா. செல்வவடிவேல் (தலைவர், த. க. நி. ஒன்றியம் யாழ். கோட்டம்)
★ சிறப்புரை: தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்கள்

### ★ கலை நிகழ்ச்சிகள் ★

1. மாணவர் நிகழ்ச்சிகள்
   - ✶ புல்லாங்குழல் இசை
   - ✶ விடுதலைப் பாடல்கள்
2. பட்டிமண்டபம்

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சு வார்த்தையின் தடைக்கு பிரதான காரணம்

| இராணுவ மேலாதிக்கமா? | அரசியல் இராஜதந்திரமா? "செஞ்சொற் செல்வன்" |
|---|---|
| திரு S. கணேசலிங்கம் | திரு. இரா. செல்வவடிவேல் |
| திரு. T. கணேசமூர்த்தி | திரு. A. ஆர்த்திகன் |
| திரு சி. மகேந்திரன் | திரு S. ஐங்கரன் |

நடுவர்: 'செந்தமிழ் வசீகர கலாநிதி. திரு A. குமாரவேல்

3. நாடகம்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்
ஆதரவில்
இருபாலை உதயதாரகை நிலைய நாடக மன்றம்
வழங்கும்

## "அவள் ஒரு மாதிரி"

(சமகால நிகழ்வு நாடகம்)

★ நன்றியுரை: திரு. சரா. புவனேஸ்வரன் (செயலாளர், த. க. நி. ஒ. யாழ். கோட்டம்)

★ அனைத்துத் தமிழீழ மக்களும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

★ யாழ் கோட்டத்திலுள்ள அனைத்து தனியார் கல்வி நிறுவன வகுப்புகளும் பிரத்தியேக வகுப்புகளும் இன்று 12-00 மணியுடன் வகுப்புக்களை நிறுத்தி சகல உறுப்பினர்களும் விழாவில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

விழாக் குழுவினர்,
யாழ். கோட்டம்.

(சி-1023)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## வாய்க்கால் திறந்தது!

சந்திரிகா தமது ஆட்சியைப் பலமுறச் செய்து நிலைபெறச் செய்வதற்கு அவருக்குப் பெருமளவு நிதி தேவைப்படுகிறது. இந்தப் பணத்துக்கு அவர் முழுக்க முழுக்க வெளிநாடுகளையும், சர்வதேச நிதி நிறுவனங்களையுமே நம்பியிருக்கிறார்.

சந்திரிகா ஒரு சோசலிசவாதி. எனவே அவர் திறந்த பொருளாதாரச் சந்தை முறையை உண்மையாகவே விரும்புகிறாரா? நிதி உதவிகளையும், மூலதனங்களையும் பெறும் வரை பெற்றுவிட்டு, திடீரென இடதுசாரிக் கொள்கைக்குத் திரும்புவாரா என்று அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகள் ''அவதானிப்பு'' நடத்தி வரும் காலம் இது.

அந்த அவதானிப்புப் போதும், சந்திரிகா திறந்த பொருளாதாரத்தை தொடர்ந்து கடைப்பிடிப்பார் என்று சான்றிதழ் வழங்குவது போல, சர்வதேச நாணய நிதியம் சந்திரிகா அரசுக்கு சலுகை அடிப்படையில் வழங்கும் கடன்களை அதிகரிக்க முடிவு செய்திருக்கிறது!

சர்வதேச நாணய நிதியத்தின் கொழும்பில் உள்ள வதிவிடப் பிரதிநிதி திரு. சயிரஸ் சசான்பொர், சந்திரிகா அரசின் பொருளாதாரக் கொள்கைகளில் தமக்கு ஏற்பட்டுள்ள நம்பிக்கைக்கான பொருளியல், நிதியியல் காரணங்களை பட்டியல் போட்டு விவரித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் கடன் உதவி கொடுக்கத் தொடங்கியதும் ஏனைய நிதி நிறுவனங்களும், வெளிநாடுகளும் உதவி வழங்கும் வாய்ப்பு உருவாகும் என்பதனையும் திரு சசான்பொர் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய செவ்வியில் சுட்டிக் காட்டியுள்ளார்.

அது உண்மையே! சந்திரிகா அரசின் வரவு - செலவுத் திட்டம் திருப்தி அளிப்பதாகவும், அதன் பொருளாதாரக் கொள்கை நம்பிக்கைக்கு உரியதாகவும் சர்வதேச நாணயநிதியம் கணித்துவிட்டமையால், இனி ஸ்ரீலங்காவுக்கு நிதி உதவி தாராளமாக வந்து குவியும். பணம் பாய்ந்தோடி வர வாய்க்கால் திறக்கப்பட்டு விட்டது.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சு, அரசியல் தீர்வு என்று கூறிக்கொண்டு பதவிக்கு வந்த அரசு, பாதுகாப்புச் செலவைக் குறைப்பதற்குப் பதிலாக அதிகரித்துள்ளது! முந்திய அரசைவிட கூடுதல் நிதி ஒதுக்கியுள்ளது. 100 கோடி ரூபா அதிக நிதி என்பது போரைத் தொடர்வதற்கான அடையான ஒதுக்கீடு என்றே கொள்ளப்பட வேண்டும்.

ஆனால், சர்வதேச நாணய நிதியமோ, உலக வங்கியோ, ஏனைய வெளிநாடுகளோ, மற்றும் மூலதனமிடுவோரோ இதனைக் கவனத்தில் எடுத்ததாகவோ, பொருட்படுத்தியதாகவோ இல்லை!

இது ஒரு முக்கியமான உண்மையைப் புலப்படுத்துகிறது. இனப்பிரச்சினை, போர்ப் பாதிப்பு, மனித உரிமைகள் ஆகியவற்றை நிதி உதவி வழங்குவதோடு அபிவிருத்தி அடைந்த நாடுகள் சம்பந்தப்படுத்திப் பேசுவது, வெறும் போலித்தனமாகும் என்பதே அந்த உண்மை. பாதுகாப்புச் செலவைக் குறைக்க வேண்டும்; போரை நிறுத்த வேண்டும்; அப்போதுதான் நிதி உதவி தரலாம் என்பதெல்லாம் வெளிப்பேச்சு.

நிதி நிறுவனங்களைப் பொறுத்தவரையில் தமது நலன்களுக்குரிய நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் நிதி உதவி; உலக நாடுகளைப் பொறுத்தவரையில் அவற்றின் வர்த்தக நலன்களை பேணினால் நிதி உதவி. இதுவே வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு மேற்கத்திய நாடுகளும், அவற்றுக்குச் சார்புடைய சர்வதேச நிதி நிறுவனங்களும் நிதி உதவி மற்றும் கடன் வழங்குவதற்கு பயன்படுத்தி வரும் அளவு கோல்கள்.

வேறு எதனையும் அவை கணக்கில் எடுப்பதில்லை. தமது நலன்களுக்கு இணங்க வைப்பதற்கான நெருக்குதல் கருவிகளாகவே போர் பாதிப்பு, மனித உரிமை மீறல் ஆகியவற்றை அவை பயன்படுத்துகின்றன!

# உணவுப் பொருள்களைப் பெற திருமலையில் படையினர் கட்டுப்பாடு

## 8 ஆயிரம் தமிழ் குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 17

திருகோணமலையில் தமிழ் கிராமங்களில் வாழும் தமிழ் மக்கள் தமக்குத் தேவையான பொருள்களைப் பெற படையினருக்கு விறகுகளை வழங்கி அனுமதி பெற வேண்டும் என்ற கட்டுப்பாடு அமுல் படுத்தப்பட்டுள்ளது.

திருகோணமலையின் ஈச்சலம்பத்தை, இலங்கைத்துறை முகத்துவாரம், புன்னையடி, கல்லடி, வாழைத்தோப்பு, வெருகல் முகத்துவாரம், முட்டுச்சேனை, மாவடிச்சேனை, கருத்தமுனைப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களுக்கு இந்தக் கட்டுப்பாட்டை அப்பகுதியில் உள்ள இராணுவத்தினர் விதித்துள்ளனர். இராணுவ முகாமின் முன்பகுதிக்குள் இந்த 9 கிராமங்களுக்குமாக ஒரே ஒரு கூட்டுறவுச் சங்கம் இயங்கி வருகின்றது.

பொருள்களை வாங்கவென வரும் மக்கள் ஒரு கட்டு விறகை இராணுவத்தினருக்கு வழங்க வேண்டும். அவ்வாறு ஒரு கட்டு விறகு வழங்கப்பட்டால் அதற்கான அனுமதித் துண்டு ஒன்றை இராணுவத்தினர் வழங்குவர். அதனைக் காட்டினால் மட்டும் கூட்டுறவுச் சங்கக் கடையில் பொருள்கள் வழங்கப்படும்.

இதனால் அப்பகுதியில் வாழும் சுமார் 8 ஆயிரம் தமிழ் குடும்பங்கள் பெரும் பாதிப்படைந்துள்ளன. [ஐ 4]

## பொருளாதார, மீன் பிடிதடை தளர்வு:

## உரியவாறு கடைப்பிடிக்க படையினருக்கு அறிவுறுத்து

கொழும்பு, ஏப். 17

கடந்த புதனன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் அறிவிக்கப்பட்ட பொருளாதார தடை நீக்கம், மீன்பிடி மீதான கட்டுப்பாடுகள் தளர்வு என்பவற்றை உரிய முறையில் கடைப்பிடிக்குமாறு வடக்கு- கிழக்கு பகுதிகளில் உள்ள படையினருக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''ஐலண்ட்'' பத்திரிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

ஆயுதங்கள் மற்றும் ரவை, குண்டுகள், வெடிப் பொருள்கள், ''ரிமோட் கொண்ட்ரோல்'' சாதனங்கள், பைனாகுலக், டெலஸ்கோப், திசை காட்டிகள் (கொம்பஸ்), பென் லைற் பற்றரிகள், இராணுவச் சீருடைகள் தவிர்ந்த ஏனைய பொருள்கள் அனைத்தும் வடக்கே தடையின்றி எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு கடற்பகுதிகளில் மீன் பிடிக்க விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தற்போது நீக்கப்பட்டுள்ளன. இரவு நேர கடற்றொழிலும் அனுமதிக்கப்பட்டுள்ளது. [ஐ-14]

## குண்டு வெடிப்பை அடுத்து தமிழகத்தில் வன்முறை

## இருவர் கொலையுண்டனர்

சென்னை, ஏப். 17

சென்னை சிந்தாவரிப்பேட்டையில் இந்து முன்னணி தலைமை அலுவலகத்தில் இடம் பெற்ற நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

கோயம்புதூர் புறநகர்ப் பகுதியில் சனியன்று அதிகாலை அடையாளந்தெரியாதோரால் கத்தியால் குத்தப்பட்ட ஒருவர் பின்னர் உயிரிழந்ததாகவும் —

சென்னையில் நடந்த கத்திக்குத்துச் சம்பவத்தில் மற்றொருவர் உயிரிழந்ததாகவும் — தமிழக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக இதுவரை ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே இக் குண்டுவெடிப்புச் சம்பவத்தை தமிழ்நாட்டின் பல கட்சிகளும் வன்மையாகக் கண்டித்துள்ளன. இதனைக் கண்டித்து கன்னியாகுமரி மாவட்டத்தில் நேற்று முழு அளவில் கடையடைப்பு நடத்தப்பட்டது.

குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து குற்றப் புலனாய்வு விசாரணைக்கு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். குண்டு வெடிப்பின்போது இருவர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# திருமலை நகரப் பகுதியை வர்த்தக மையமாக்க திட்டம்

கொழும்பு, ஏப். 17

திருமலை நகரப்பகுதி வர்த்தக நிலையமாக மாற்றப்படவிருக்கிறது. இதற்கான உருவகத் திட்டங்களை தயாரிக்குமாறு சம்பந்தப்பட்ட முகவர்களிடம் ஜனாதிபதி பணித்துள்ளார் என்று வர்த்தக, வாணிப, உணவு அமைச்சர் கிங்ஸ்லி விக்ரமரட்ண தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு முதலீடுகளுக்கும் சுற்றுலாக் கிராமங்களுக்கும் வசதிகளை அளிக்கும் பல்வேறு வர்த்தக நகரத்துக்கான சகல அடிப்படை அமைப்புக்களையும் திருமலை நகரம் ஏற்கனவே கொண்டுள்ளது. முதலீடு செய்வது பற்றிய விசாரணைகளை ஏற்கனவே பலநாடுகள் அனுப்பி வைத்துள்ளன என்று அமைச்சர் தெரிவித்தார்.

யுத்த சூழ்நிலையை முடிவுக்குக் கொண்டுவந்து அபிவிருத்திக்கான எதிர்காலத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது என்றும் அமைச்சர் சொன்னார். இந்தத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி வேலைகள் பெருந்தொகையானோருக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும்— என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-4]

# ஆசிரியருக்கு அடுத்த மாதம் புதிய சம்பளத் திட்டம்

கொழும்பு, ஏப். 17

கல்வி உயர்கல்வி அமைச்சு ஆசிரியர்களுக்கான புதிய சம்பளத்திட்டத்தை அடுத்த மாதம் முதல் வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் இது அமுல் செய்யப்படவுள்ளது. இதன் பிரகாரம் ஆசிரியர்களுக்குக் கிடைக்க வேண்டிய 4மாதச் சம்பளப் பணமும் முழுவதுமாக வழங்கப்படும்.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன இதற்கான பணிப்புரையை விடுத்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 6ஆம்திகதி அமைக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைக்கு அமைய புதிய சம்பளத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்திற்கமைய ஒரு லட்சத்து 90ஆயிரம் ஆசிரியர்கள் நன்மை அடைவார்கள். இது பற்றிய விவரங்கள் அடுத்தவாரம் செய்தித் தாள்களில் பிரசுரிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

பல்வேறு தரங்களிலுள்ள ஆசிரியர்களை ஆசிரிய சேவைக்குள் கொண்டுவர மாகாண கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். [ஜ-க-14]

## கலை விழா

யாழ். கிறீன் கிங்ஸ் கழகத்தின் 30 ஆவது ஆண்டு விழாவும், ஈஸ்டர் கலைவிழாவும் இன்று திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு யாழ். மத்தியூஸ் வீதியில் உள்ள கிறீன் கிங்ஸ் கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

விழாவில் சங்கீத இரத்தினம் சி. மகேந்திரனின் மாணவன் செல்வன் செல்வராஜா டெனியசோதரனின் மிருதங்க அரங்கேற்ற பாராட்டு வைபவமும் இன்னிசை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

இன்னிசை நிகழ்ச்சியில் பொன். சுந்தரலிங்கத்தின் பாட்டு இடம்பெறும். அணிசெய் கலைஞர்களாக ஆர். இராதாகிருஷ்ணனின் வயலினும், செல்வன் செ டெனியசோதரனின் மிருதங்கமும், சி. மகேந்திரனின் செஞ்சிராவும், செல்வன் ம. குலேந்திரனின் கடமும், அ. செல்வரத்தினத்தின் தம்புராவும் இடம்பெறும். (ஐ)

## பாலர் பாடசாலை ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம் ஏப் 17

யாழ். மாநகர சபைப் பகுதிக்கு உட்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான விடுமுறை காலப் பயிற்சி நாளை செவ்வாய்க்கிழமையும், எதிர்வரும் 20 ஆம், 21 ஆம் திகதிகளிலும் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு இசை, நாட்டியம் நாடகம் தொடர்பான பயிற்சிகள் அதில் வழங்கப்படும்

யாழ். பல்கலைக்கழக கல்விப் பகுதி, நுண்கலைப்பீடம், இராமநாதன் நுண்கலை நிலையம் ஆகியவற்றின் ஆதரவில் இப் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன (ஐ)

## வாகனங்களில் கறுப்பு கண்ணாடி தடை

கொழும்பு, ஏப். 17

வாகனங்களில் கறுப்பு மற்றும் உருமறைப்புக் கண்ணாடிகளைப் பயன்படுத்துவதற்கு தெற்கில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கண்ணாடிகள் பொருத்தப்பட்ட வாகனங்களை பயன்படுத்துவோர் மீது அடுத்த மாதம் முதல் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவினர் சட்டநடவடிக்கை எடுப்பர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-14]

## தொலைக் கல்வி மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஏப். 17

வேலணை தொலைக் கல்வி மத்திய நிலையத்தைச் சேர்ந்த 91-93, 92-94 ஆம் ஆண்டு பிரிவு ஆரம்பப் பயிற்சி நெறி ஆசிரிய மாணவர்களை நாளை செவ்வாய் காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

# சமாதான முயற்சிகள் தோல்வியுற்றால் இருதரப்பிலும் பலத்த உயிர்ச் சேதம் வரும்

## பதவி விலகிய பத்திரிகைச் செயலாளர் சூலவன்ஸ கருத்து

*தெற்கின்பிரபல பத்திரிகையாளரான சூலவன்ஸ சிறிலால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பத்திரிகைச்செயலாளராகச் சிறிது காலம்பணியாற்றிய பின்னர் அண்மையில் ராஜினாமாச் செய்தார்.*

*பத்திரிகைச் செயலாளர் பதவியைத் துறந்த பின்னர் தமது அனுபவத்தைக் கொண்டு அவர் எழுதிய ஒரு கட்டுரையின் தமிழாக்கமே இது வாகும்.*

*இக் கட்டுரை கடந்த 09. 04. 95 ஆம் திகதிய 'யுக்திய'' பத்திரிகையில் வெளியானது.*

பொதுசன ஐக்கிய முன்னணியை ஆட்சி பீடத்தில் அமர்த்த பல்வேறு வகைகளிலும் ஒத்துழைத்த நாங்கள், இந்த நாட்டின் சாபக்கேடாக உருவாகியுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருந்தோம். யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவந்து சமாதானத்தை உருவாக்குவதே எமது எண்ணமாக இருந்தது. கடந்த பொதுத் தேர்தலின் போதும் ஜனாதிபதித் தேர்தலின் போதும் இதனாலேயே பொ. ஐ. முன்னணி வெற்றி பெற முடிந்தது.

அதுவரை வடபகுதிக்கு கொண்டு செல்ல தடைவிதிக்கப்பட்டிருந்த பொருள்கள் மீதான தடைகளை ஓரளவு நீக்கிய ஜனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சியில் காலடி எடுத்துவைத்த விதம் அற்புதம். அந்த அற்புதமான பிரவேசத்துடன் சமாதான முயற்சிகளில் தாம் மனந்திறந்து செயற்படப் போவதாகக் கூறிய வார்த்தைகள் பண்பானவை, நல்லவை.

நல்ல ஆரம்பத்துடன் தொடங்கிய அந்த சமாதான முயற்சிகள் மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் இரு தரப்பினரும் ஒருவர்மீதுஒருவர் நம்பிக்கை இழந்த காரணத்தினால் கருத்து மோதலாக மாறியுள்ளது. என்பதைக் கவலையுடன் குறிப்பிடவேண்டியுள்ளது.

இந்த நிலைமை மறைக்கப்பட வேண்டியதொன்றல்ல. இது பற்றி மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். மக்களுக்கு மறைப்பது புத்திசாலித்தனம் ஆகாது. உண்மைகளைமூடி மறைக்கக் கூடாது. சமாதானமுயற்சிகள் எதனை நோக்கிச் செல்கிறது? அம் முயற்சிகளுக்கு என்ன நடக்கும்? ஆகியன பற்றி மக்கள் அறிந்திருப்பின் தவறு ஏற்படின் அதை நிவர்த்தி செய்வதற்கு வழி கிடைக்கும்.

**நம்பிக்கைக்கு ஊறு**

இருதரப்பினருக்குமிடையே உருவான நம்பிக்கை, மோதல் தவிர்ப்பு உடன்பாடு வரை நிலைத்தது. அந்த நம்பிக்கைக்கு எங்கே எவ்வாறு ஊறு ஏற்பட்டது. என்பதை நாங்கள் எவரும் அறியோம். பொது மக்களும் அறியவில்லை. ஆனால் இருதரப்பினரும்

ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை இழந்துள்ளதும் அதன் காரணமாக கருத்து மோதல்கள் இடம்பெறுவதும் வெளிப்படையாகத் தெரிகிறது.

இந்த நிலைமை நல்லதல்ல மீண்டும் இருதரப்பினரையும் சமாதான முயற்சிகளில் ஈடுபடச் செய்வது சமாதானத்தை விரும்பும் இந்நாட்டு மக்களின் பொறுப்பாகும். அவ்வாறான முயற்சிகள் எடுக்கப்படாவிடின் நம்பிக்கையீனங்கள் வலுவடைந்து தீமைபயக்கும் கொடிய யுத்தம் மீண்டும் ஆரம்பமாவதையும் அதனால் வடபகுதி, தென்பகுதி மக்கள் துன்பங்களை அனுபவிக்கப் போவதையும் தடுக்க முடியாது.

இம்முறை மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளின் பயனாக மோதல் தவிர்ப்புக்கு [illegible] உடன்பட்டதையோ அல்லது தனிநாடு [illegible] குறிக்கோளு'-ன்]செயற்பட்ட விடுதலைப் புலிகளை அதிகாரப் பகிர்வுக்கு உடன்படச் செய்ததன் மூலம் கிடைத்த வெற்றிகளையோ மாத்திரம் பெருமையாகக் கொள்ளாமல் நாட்டிலுள்ள சகல மக்களினதும் எதிர்காலத் தலைவிதியைத் தீர்மானிக்கும் சமாதானத்தை நோக்கிச் செல்ல நாங்கள் இருதரப்பினரையும் தூண்ட வேண்டும். தற்போது நிலவும் கருத்து மோதல்களை இருதரப்பினரும் கைவிடும் விதத்தில் வடபகுதி, தென்பகுதி மக்கள் குரலெழுப்ப வேண்டும்.

மனந்திறந்து செயற்படுவேன் என ஜனாதிபதி ஆரம்பத்தில் கூறியதானது சமாதான முயற்சிகளில் அவர் இறங்கியதற்குச் சான்றாக அமைந்த போதிலும் விடுதலைப் புலிகளின் தலைவருக்கும் தமக்குமிடையே 34 கடிதத் தொடர்புகள் இடம்பெற்றுள்ளன என ஜனாதிபதி வெளியிடும் வரை இவ்வளவு கடிதத் தொடர்புகள் இடம் பெற்றுள்ளதை இந்நாட்டு மக்கள் எவரும் அறிந்திருக்கவில்லை.

கடிதத் தொடர்புகள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் ஜனாதிபதிக்குமிடையே இடம்பெற்றிருப்பினும் இது அவர்கள் இருவருக்குமிடையேயான தனிப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் இடம்பெறவில்லை. மாறாக முழு நாட்டையும் நாட்டிலுள்ள அனைத்து மக்களையும் பாதிக்கும் ஒரு தேசியப் பிரச்சினைக்குத் தீர்வினைக் காண மேற்கொள்ளப்பட்ட கடிதத் தொடர்புகளாகும், கொடிய யுத்தம் காரணமாக இந்த நாட்டின் தமிழ் மக்கள் உலகிலுள்ள பல நாடுகளில் அகதிகளாகத் தஞ்சமடைந்திருப்பதனால் இது ஓரளவிற்குச் சர்வதேசப் பிரச்சினையாக உருவாகியுள்ளது. இக் காரணத்தால் இது சர்வதேசச் சமூகத்தால் உற்று நோக்கப்படும் பிரச்சனையாக [illegible]

இவ்வாறு தீர்வினை [illegible] முயற்சிகள் பற்றியோ அல்லது இடம்பெற்ற கடிதத் தொடர்புகள் பற்றியோ அல்லது ஏனைய நடவடிக்கைகள் பற்றியோ அமைச்சரவை அறிந்திராதிருக்கலாம்.

பொதுசன ஐக்கிய முன்னணியில் இணைந்துள்ள அரசியற் கட்சிகள் அறிந்திராதிருக்கலாம்.

எதிர்க்கட்சிகள் அறிந்திராதிருக்கலாம்.

இதை எழுதும் நான் உட்பட இந்நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் அறிந்திராதிருக்கலாம்.

ஆனால் எங்கள் அனைவருக்கும் சமாதானமே தேவையான ஒன்றாகும். இதற்கு எந்தவித நிபந்தனைகளும் தேவையில்லை. ஒவ்வொரு கடிதத்திலுமுள்ள விடயங்கள் என்ன? ஒவ்வொரு பேச்சுவார்த்தைகளிலும் அந்தரங்கமாக ஆராயப்பட்ட விடயங்கள் எவை போன்ற விடயங்களை எவரும் அறிந்திராவிடினும் எமக்கும் நாட்டிற்கும் அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் தூய எண்ணத்துடன் மேற்கொள்ளப்பட்ட கடிதத் தொடர்புகளும் பேச்சுவார்த்தைகளும் தற்போது கருத்து மோதல்களாக உருவெடுத்துள்ளன. இந்நிலையைத் தவிர்த்து உரிய சமாதான வழிமுறைக்கு இட்டுச் செல்வது எங்கள் அனைவரதும் கடமையாகும். சமாதான முயற்சிகள் வெற்றி பெறின் நல்ல மதிப்பெண்கள் ஜனாதிபதிக்கே கிடைக்கும்.

**எதிர்க்கட்சிகளின் பங்கு**

அரசாங்கம் தனது சமாதானத் தீர்வை எங்களிடம் காட்டவில்லை. எங்களை இந்த முயற்சிகளில் சேர்க்கவுமில்லை. எங்கள் கருத்துக்கள் கோரப்படவுமில்லை என நொண்டிச் சாட்டுகளைக் கூறி எதிர்கட்சிகள் இப்பிரச்சினையிலிருந்து நழுவக் கூடாது ஆரம்பத்திலிருந்தே இந்தச் சமாதான முயற்சிகளில் எதிர்கட்சிகளையும் தொடர்புபடுத்தியிருக்க வேண்டும் அந்தத் தொடர்புகளை எவ்வாறு ஏற்படுத்துவது என்பதைப் பொறுப்பானவர்கள் தீர்மானிக்க வேண்டும்.

எடுக்கப்படவுள்ள தீர்வுக்கு எதிர்க்கட்சிகள் உட்பட அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்பைப் பெற வேண்டியுள்ளதால் ஆரம்பத்திலிருந்தே இது பாதுகாப்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கையாகும். ஆனால் இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும் இருதரப்பினரும் பரஸ்பரம் நம்பிக்கையை இழந்து அது கருத்து மோதல்களாக உருவெடுத்துள்ள இந்த நிலையைப் போக்கி இருதரப்பினரையும் மீண்டும் சமாதான முயற்சிகளில் ஈடுபடும் விதத்தில் அழுத்தம் கொடுக்க வேண்டியது எதிர்க்கட்சிகளின் தேசியக் கடமையாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் அரசுக்கு சமாதான முயற்சிகளைத் தொடருமாறு அழுத்தம் கொடுக்க வேண்டும் கருத்துமோதல்களைக் கைவிடுமாறு அழுத்தம் கொடுக்கவேண்டும் இது மக்களின் தேவையாகும். விசேடமாக பொ. ஐ. முன்னணி அரசை உருவாக்க அர்பணிப்புடன் செயற்பட்ட கிராமங்களில், நகரங்களில் அமைந்த அமைப்புகளும் சமாதான முயற்சிகள் தொடர்பாக வற்புறுத்தவேண்டும்

ஏழு மாதங்களாக ஆட்சி செலுத்தும் தமது அரசின் தலைவர்கள் முகங்கொடுக்க முடியாதுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடருமாறு வற்புறுத்தவேண்டும்.

பொதுசனஐக்கியமுன்னணி அரசின் கட்சி அமைப்பாளர்கள், இளை அமைப்பாளர்கள் ஆகியோர் எதிர்பார்த்தவிதத்தில் அரசுடனும் அவர்களது தலைவர்களு'-னும்தொடர்புகளை தொடர்ந்து பேணவோ அல்லது தங்களது தேவைகளை நிறைவேற்றவோ முடியாமல் உள்ளனர் என்பதை நாம் ஏற்கிறோம் இப்பிரச்சினைக்குத்] தனியாகத் தீர்வு காணப்படவேண்டும் இதற்கான பேச்சுவார்த்தைகளைத் தனியாக மேற்கொள்ளவேண்டும். ஆனால் இவ்வாறான உள்ளகப் பிரச்சினைகளால் சமாதான முயற்சிகள் பாதிக்கப்படுமேயானால் நாங்கள் அனைவரும் துன்பத்திற்குள்ளாக நேரிடும் எமது பிள்ளைகளும் துன்பங்களை எதிர்நோக்க நேரிடும் சமாதான முயற்சிகள் தோல்வியுறுமாயின் எமது எதிர்காலப் பரம்பரையினர் துன்பங்களை அனுபவிக்கநேரிடும் யுத்தத்திற்காக எமது நிதி பெருமளவில் விரயமாக்கப்படும். இருதரப்பிலும் பலத்த உயிர்ச்சேதங்களை ஏற்படும்.

அனைத்து மக்களையும் பாதிக்கும் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இருதரப்பினருக்கும் அழுத்தங்களைக் கொடுப்பது வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் வாழும் மக்களின் கடமையாகும் தமிழ்-முஸ்லிம் அரசியல்கட்சிகள் தற்போது தோன்றியுள்ள கருத்து மோதல் நிலையைப் போக்கி இருதரப்பினரையும் மீண்டும் சமாதான முயற்சிகளில் ஈடுபடுத்த உடன் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். சமாதான முயற்சிகளில் பெரும்பங்காற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் வெகுஜன அமைப்புகளும் இணைந்து வடக்கிலும் தெற்கிலும் மக்களைச் சமாதான முயற்சிகளில் ஈடுபடுத்துவர் என்பதில் சந்தேகமில்லை.

இப் பிரச்சினைக்குயாராலோ அல்லது தனியாகவோ தீர்வு காணப்படும் என நினைத்து ஏனையோர் வாழாவிருப்பது பாரதூரமான விளைவை ஏற்படுத்தும் இது பிரபாகரனின் அல்லது ஜனாதிபதியின் தனிப்பட்ட பிரச்சினை அல்ல அதே போல இருவரும் தனித்தனியான தீர்வினைக் காணவும் முடியாது. ஏனோதானோ மனப்பான்மை ஆபத்தை விளைவிக்கும் குறிப்பாக அரசு சமாதான நடவடிக்கையில் அக்கறையுடன்செயற்பட வேண்டும் பிரச்சினைகள் ஒன்று சேர்ந்து சிக்கல் நிலை உருவாகுமேயானால் அதனால் பாதிக்கப்படப் போவது ஒருவரல்ல; இந்த நாடும் இங்கு வாழும் அனைத்து மக்களுமே ஆகும். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதிவிட வேளாண்மை போட்டி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் ஏப் 14

1994/95 ஆம் ஆண்டில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், அரச அரசசார்பற்ற நிறுவனங்களும் இணைந்து நடத்திய வதிவிட வேளாண்மைப் போட்டியில்—கைதடி மேற்கு கிராமிய உற்பத்திக் குழுப் பகுதியில் பங்குபற்றிய 43 போட்டியாளர்களில்—முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் கைதடி மேற்கு பராசக்தி மாதர் முன்னேற்ற சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

கைதடி மேற்கு கிராமிய உற்பத்திக் குழுத் தலைவர் திரு. கனகசபாபதி தலைமையில் இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் யாழ் மாவட்ட கிராமிய உற்பத்திக் குழுப் பகுதியைச் சேர்ந்த திரு ப. தியாகராசா பரிசில்களை வழங்கினார்.

இதில் கைதடி மேற்கு கிராம சேவகர் திரு. யோசப் உட்பட கிராமிய உற்பத்திக் குழுக்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

பரிசில்களை சனசமூக நிலையங்கள், மாதர் முன்னேற்ற சங்கம், தனிநபர் பலரும் முன்வந்து வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.


கோண்டாவில்

நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயில்

## அலங்காரத் திருவிழா

காலம்:- இன்று (17.04.95 திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு விசேட அபிசேக ஆராதனை திருவீதியுலா

நிகழ்ச்சிகள்:- மேளக்கச்சேரி

கோண்டாவில் V K. கானமூர்த்தி

V K பஞ்சமூர்த்தி குழுவினர்

அளவையூர் 'சுதந்திரம்' குழுவினர்

இவர்களுடன்

இணுவையூர் K. புண்ணியமூர்த்தி

இணுவையூர் R. நித்தியானந்தம

மாலை 9.00 மணி:

"ராஜன்ஸ்' இசைக் குழுவினரின்

"இன்னிசை மாலை"

ஒளி, ஒலி அமைப்பு: றோயல், சபரி

— விழா அமைப்பாளர்.

(சி/1032)



## நிரு ரியுசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்

AL 97

யாழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை கலை, வர்த்தக வகுப்புக்கள்

ஆரம்பம்: 21 - 04 - 95 வெள்ளி 2 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. உதயன் |
| கணக்கியல் | — | திரு ஸ்ரீ |
| வர்த்தகம் | — | பிரபல ஆசிரியர் |
| அளவையியல் | — | திரு S S. மனோகரன் |
| இந்துநாகரிகம் இந்துசமயம் | — | திரு சோதி |
| புவியியல் | — | திரு. வேலா |
| தமிழ் | — | திரு குழந்தை |
| அரசியல் | — | திரு சிவனேசன் |
| வரலாறு | — | திரு. பிள்ளை. |
| நாடகமும் அரங்கும் | — | திரு. சத்தியா |

★ அனுமதிகளை முற்கூட்டியே பதிவு செய்யவும்.

(சி/984)


## மரண அறிவித்தல்

திருமதி

### சுந்தரேஸ்வரி யோகேந்திரம்

(சுந்தக்கா)

வீமன்காமம் தெல்லிப்பழையைச் சேர்ந்த திருமதி சுந்தரேஸ்வரி யோகேந்திரம் 16 - 04 - 95 நேற்று மாலை காலமானார்.

இவர் காங்கேசன்துறை குரு வீதியைச் சேர்ந்த யோகேந்திரம் [யோகன்] [முன்னைநாள் சந்திரா அச்சக ஊழியர், தற்போது சுன்னாகம் திருமகள் அழுத்தக ஊழியர்] அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரு. வல்லிபுரம் — திருமதி இரசபமாதம்பதிகளின் இளைய புத்திரியும், திருமதிகள் இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, சண்முகதாசன், [தொழில்நுட்ப உதவியாளர், நீர்ப்பாசன திணைக்களம், வவுனிக்குளம்] முருகதாஸ் [அரச நில அளவையாளர், கோண்டாவில்] ஆகியோரின் சகோதரியும், சண்முகநாதன், அருளானந்தம், விமலா, வசந்தாதேவி, தெய்வநாயகி, சகாம்பிகை, கணேசநாதன் [காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை], காலஞ்சென்ற புருகேசு, பராசக்தி ஆகியோரின் மைத்துனியும், விஷ்ணுகாந்தன் [U K] பிரதீபா ஆகியோரின் சித்தியும், சஞ்சு, சரண், சஞ்ஜீவ் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [17-04-95] பிற்பகல் 2 மணியளவில் கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று தாவடி மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சோ யோகேந்திரம்
[கணவர்]

'வசந்த வில்லா'
கே கே. எஸ். வீதி,
கோண்டாவில்.

[36279]

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 2 30 மணி முதல் ஆரம்பமாகும் ஆட்டங்களில் பங்குபற்றும் பாடசாலை அணிகள் வருமாறு:-

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில்

★ சென் ஜோன்ஸ் எதிர் அச்சுவேலி ம. வி. [17 வயது]

★ சென். ஜோன்ஸ் எதிர் ஸ்கந்தவரோதயா [19 வயது]

★ புங்குடுதீவில் ம. வி. எதிர் நடேஸ்வரா [19 வயது]

யாழ். இந்துவில்

★ மானிப்பாய் இந்து எதிர் கனகரத்தினம் ம. ம. வி. [19 வயது]

★ மானிப்பாய் இந்து எதிர் வைத்தீஸ்வரா [17 வயது]

★ மானிப்பாய் மெமோறியல் எதிர் புனித மரியாள் வித்தியாலயம் [17 வயது]

சென ஜோன்ஸில்

★ சென். ஹென்றீஸ் எதிர் இடைக்காடு ம வி [19 வயது]

★ சென். ஹென்றீஸ் எதிர் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் [17 வயது]

★ ★ ★

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப்போட்டியின் இறுதி நிலை ஆட்டங்கள் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் இன்று நடைபெறும்.

மூன்றாம் இடத்தைப் பெறும் அணியைத் தெரிவு செய்வதற்கான ஆட்டம் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும். 17 வயதுப் பிரிவில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியை எதிர்த்து யாழ் இந்து மகளிர் கல்லூரியும், 19 வயதுப் பிரிவில் கொக்குவில் இந்துவை எதிர்த்து கன்னியர் மடம் ம.வியும் மோதும்.

மாலை 4 மணி முதல் நடைபெறும் இறுதியாட்டங்களில் வேம்படி மகளிர் கல்லூரியை எதிர்த்து 17 வயதுப் பிரிவில் கனகரத்தினம் ம. ம. வியும், 19 வயதுப் பிரிவில் யாழ். இந்து மகளிர் கல்லூரியும் விளையாடும். (உ)

## குன்றக்குடி ---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் அஞ்சலிக்காக குன்றக்குடி மடத்தில் வைக்கப்பட்டிருந்தது பெரும் எண்ணிக்கையானோர் அவருக்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

குன்றக்குடி அடிகளாரின் பூதவுடல் நேற்று மாலை சமாதிவைக்கப்பட்டது.

குன்றக்குடி மடாதிபதியாக ஸ்ரீமத் தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிகர் விரைவில் பதவியேற்பார்.

நிரந்தசமாதானம் ஏற்படும் வரை இலங்கைக்கு தாம் விஜயம் செய்யப்போவதில்லை என்று குன்றக்குடி அடிகளார் தெரிவித்து வந்தது குறிப்பிடத்தக்கது. [ஐ-14-7]


97 - AL

★ விலங்கியல் ★

R. ஈஸ்வாதாசன்
B Sc [Cey.] Dip-in-Ed

புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக பிரத்தியேக வகுப்பு

ஆரம்பம்: 18 - 04 - 95
செவ்வாய் 1 மணி

இல: 33. குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

★ ஆரம்பத்தில் இருந்து மட்டும் அனுமதி வழங்கப்படும்.

★ வார, வார இறுதி சனி, ஞாயிறு வகுப்புக்கள். நேர அட்டவணை நேரில் பெறலாம்.

[சி-1030]


## 4 படையினர் படுகாயம்

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா விசேட பொலீஸ் அதிரடிப் படையினர் பயணஞ் செய்த பவள் கவச வாகனம் ஒன்று தடம்புரண்டதில் அதில் பயணம் செய்த நான்கு படையினர் படுகாயமடைந்துள்ளனர்

பொலீஸ் அதிரடிப் படையினர் நன்கு மது அருந்திவிட்டு ரூபஸ்குளம் என்ற இடத்திலிருந்து பாவட்டா என்ற இடத்துக்கு வந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றது.

விபத்தில் குழப்பமடைந்த படையினர் துப்பாக்கிப் பிரயோகம் ஈடுபட்டிருந்த பொது மக்களின் சில மாடுகளைச் சுட்டுக் கொன்றுவிட்டு சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ - 7)

## பாதிப்புகள்: விவரம் சேகரிப்பு

1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வன்செயல்கள் மற்றும் இயற்கைக் காரணிகளால் சொத்திழப்பு, உயிரிழப்பு மற்றும் அங்கவீனம் போன்ற பாதிப்புகள் குறித்த விவரங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கிராம சேவகர் பிரிவு ரீதியில் சேகரித்து வருகிறது.

அந்த வகையில் நாளை 18 ஆம் திகதியும், 19 ஆம் திகதி புதன்கிழமையும் யாழ். பிரதேச செயலர் பிரிவில் இருநகர் (ஜே/67) கி. சே பிரிவுக்கான பதிவுகள் பிரஸ்தாப கி சே அலுவலகத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஆசிரியருக்கு அழைப்பு

யாழ் மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் மாவட்ட நிலை வலைப்பந்துச் சுற்றுப் போட்டி நிரல் தயாரிப்பதற்கான கூட்டம் யாழ் கல்வித் திணைக்கள வலயம் I இன் பணிமனையில் இன்று காலை 10 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

உப மாவட்ட நிலையில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகளின் அணிப் பொறுப்பாசிரியர்கள் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (உ)

## மேதினக் கூட்டம்

கொழும்பு, ஏப். 17

ஆளும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டம் கொழும்பு மாநகர சபை மைதானத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஜனாதிபதியின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முறைக்கு வரவில்லை; அது பற்றிய வர்த்தமானி அறிவித்தலும் வெளியாகவில்லை; தடை தளர்த்தப்பட்டதாகக் கூறப்படும் எந்தப் பொருளையும் வடக்கே அனுப்புவதற்கு முன் முயற்சி ஏதும் எடுக்கப்படாததோடு அதற்கான அனுமதியையும் படையினர் வழங்கவில்லை.

ஆகவே தற்போதைய தடை தளர்வு பற்றிய அறிவிப்பும் முன்னர் விடுக்கப்பட்ட வெறும் அறிவிப்பாகவே இருக்கும்; செயலுருப் பெறப் போவதில்லை என விடுதலைப்புலிகள் கருதுகின்றனர்.

மீன்பிடிக் கட்டுப்பாட்டிலும் தளர்வு இருப்பதாக ஜனாதிபதி தமது பதிலில் கூறியுள்ள போதிலும் —

அந்த அறிவித்தலில் உள்ள கட்டுப்பாடுகள் ஏற்க முடியாதவை என புலிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்

கடந்த பத்தாம் திகதி நான்காம் கட்டப் பேச்சு நடத்த வந்த அரசுக் தரப்பினரிடம் இதுபற்றி திட்டவட்டமாக புலிகள் சுட்டிக்காட்டிய பின்னரும், அந்தக் கட்டுப்பாடுகளை தளர்த்த அரசு இணங்காமல்போனது. தமது கோரிக்கையை உதாசீனம் செய்யும் நடவடிக்கை என்றே புலிகள் கருதுவதாகத் தெரியவருகின்றது

பூநகரிப் பாதை விடயத்திலும் மூன்று மாதங்களில் அது குறித்து மீளாய்வு செய்யப்படும் என்று ஜனாதிபதி கூறியிருப்பதை மழுப்பல் பதிலாகவே புலிகள் கருதுகின்றனர். புலிகளுக்கு இப்பதில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

மூன்று மாதங்களில் பூநகரி முகாம் மூடப்படும் என ஜனாதிபதி உறுதியளித்திருந்தால் புலிகள் அதனை ஏற்றிருக்கக் கூடும்.

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிப்பது குறித்து பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி கூறுவது காலத்தை இழுத்தடிக்கும் திட்டமே என்று புலிகள் தரப்பு கருதுகின்றது. புலிகள் போராளிகளின் பாதுகாப்போடு தொடர்புடைய இந்த விடயத்தில் அரசு உதாசீனமான போக்கைக் கடைப்பிடிப்பது புலிகளைச் சீற்றமடைய வைத்திருப்பதாகவும் அறியவருகின்றது.

இந்தக் காரணங்களினால் சந்திரிகாவின் பதிலை சாதகமற்ற ஒன்றாகவே புலிகள் கருதக்கூடும் என்றும் —

மேற்படி நான்கு விடயங்கள் தொடர்பாக தலைவர் பிரபாகரன் அரசுக்கு வழங்கியுள்ள கால அவகாசம் நாளை மறுதினம் காலாவதியாகும் நிலையில், அடுத்த கட்ட நடவடிக்கையில் புலிகள் இறங்கக் கூடும் என்றும் —

புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்களில் இருந்து உதயனுக்குத் தெரிய வந்தது. (உ)

# கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம், ஏப் 17

மாணவர் அறிவியற் கழகம் அதன் உறுப்பினர்களுக்கு இந்த வாரம் வகுப்புகள், கலந்துரையாடல் முதலிய பல நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளது.

கோண்டாவில் காங்கேசன்துறை சாலையில் அமைந்துள்ள மேற்படி கழகத்தில் இன்று 17 ஆம் திகதி திங்கட்கிழமை, 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 20 ஆம் திகதி வியாழக்கிழமை, 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 22 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய தினங்களில் விஞ்ஞான செயன்முறை வகுப்புகளும் கணித செயல்முறை வகுப்புகளும் நடைபெறும்.

அவற்றின் விவரம் வருமாறு:-

திங்கள்

பி.ப 3.00 மணி முதல் 4. 30 மணி வரை — ஆண்டு 9 — கேத்திர கணித செயல்முறை வகுப்பு - "நடுப்புள்ளித் தேற்றம் பி.ப 3 00 மணியிலிருந்து 4. 30 மணி வரை ஆண்டு 10 விஞ்ஞான செயல்முறை வகுப்பு — நீரடர்த்தி மானிகொண்டு வெவ்வேறு செறிவுடைய பதார்த்தங்களின் சாரடர்த்தி துணிதல். குருதியை நுணுக்குக்காட்டியினூடாக அவதானித்தல். பதார்த்தம் ஒன்றின் தன்வெப்பக் கொள்ளளவைத் துணிதல்.

செவ்வாய்

பி.ப 3.00 மணியிலிருந்து 4 30 மணிவரை ஆண்டு 10, 11 கேத்திரகணித வினாவிடை செயல்முறை வகுப்பு.

வியாழன்

பி.ப 3 00 மணியிலிருந்து 4.00 மணிவரை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் பி.ப 4.00 மணியிலிருந்து 6. மணிவரை "விஞ்ஞான ஒளிப்படக்காட்சி"

வெள்ளி

பி.ப 3 00 மணியிலிருந்து 4 30 மணிவரை ஆண்டு 11 விஞ்ஞான செயல்முறை வகுப்பு யூலின் விதியை வாய்ப்புப் பார்த்தல் மின்னின் காந்த விளைவுகளை வாய்ப்புப் பார்த்தல்.

சனி

மு.ப 9 00 மணியிலிருந்து 10.30 மணிவரை ஆண்டு 10 11 கேத்திரகணித செயல்முறை வகுப்பு - "வட்டம்" பி.ப 3 00 மணியிலிருந்து 4 30 மணிவரை ஆண்டு 9 விஞ்ஞான செயல்முறை வகுப்பு — வளியின் ஒட்சிசன் ($O_2$) இன் சதவீதத்தை அறிதல் வளியில் தொழிற்படு கூறு, தொழிற்படாகூறு என இரு பகுதிகள் உண்டென்பதை அவதானித்தல்.

# ஜி. சீ.ஈ. பரீட்சை முடிவுகள்

கடந்த வாரம் வெளியான ஜி. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சையில் மற்றும் சில பாடசாலைகள் பெற்ற பேறுபேறுகளின் விவரம் வருமாறு:-

மீசாலை வீரசிங்கம் ம வி.
5டி 3சி — ஒருவர், 5டி 2சி 1எஸ் — ஒருவர், 3டி 4சி 1எஸ் - இருவர்.

மறவன்புலோ சகலகலா வல்லி
1டி 3சி 3எஸ் — ஒருவர்.

கைதடி நுணாவில் அ. த. க. பா
1டி 2சி 3எஸ் — ஒருவர்

கச்சாய் அ. த. க
2டி 2சி 4எஸ் — ஒருவர், 2டி 3சி 4எஸ் — ஒருவர்

சாவகச்சேரி மகளிர்
4டி 4சி — ஒருவர், 4டி 3சி 1எஸ் — ஒருவர், 4டி 2சி 2எஸ் — ஒருவர்

மட்டுவில் ம வி.
2டி 3சி 3எஸ் — ஒருவர், 2டி 2சி 2எஸ் — ஒருவர். 1டி 6சி 1எஸ் — ஒருவர், 1டி 5சி 1எஸ் — ஒருவர்.

சரசாலை ஸ்ரீகணேசா
1டி 5சி 1எஸ் ஒருவர்

வாணி ம வி.
4டி 2சி — ஒருவர்

உசன் இராமநாதன் ம.வி.
4டி — ஒருவர்

சாவகச்சேரி டிறிபேர்க்
6டி 1சி 1எஸ் — ஒருவர், 5டி — ஒருவர், 4டி 3சி — ஒருவர்.

சாவகச்சேரி இந்து
7டி 1சி — இருவர், 7டி 1எஸ் — ஒருவர் 6டி 2சி மூவர், 5டி 3சி — இருவர், 4டி 4சி — நால்வர், 4டி 3சி 1எஸ் — இருவர்,

இயக்கச்சி அ.த.க.பா
2டி 8சி 3எஸ் — ஒருவர், 1டி 5சி 2எஸ் — ஒருவர், 1டி 3சி 4எஸ்—ஒருவர்.

நாவற்குழி ம.வி
6டி 2சி — ஒருவர், 4டி 4சி — ஒருவர், 2டி 6சி — ஒருவர்

கைதடி விக்னேஸ்வரா
3டி 5சி — ஒருவர், 2டி 4சி 2எஸ் — ஒருவர், 2டி 3சி 3எஸ் — ஒருவர்,

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வி.
1டி 5சி 2எஸ் — ஒருவர், 1டி 5சி 1எஸ் — ஒருவர், 1டி 3சி 3எஸ் — ஒருவர்

[ஜி சி ஈ சாதாரண தரப் பரீட்சையில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் 8டி எடுத்த மாணவியின் பெயர் மேகலா லோகநாதபிள்ளை என்று அறிவிக்கப்படுகிறது.]

## பரீட்சைகள் ஒத்திவைப்பு

தொலைக்கல்வி ஆசிரிய பயிற்சி பெறும் பயிலுநர் ஆசிரியர்களுக்கான முதலாம் ஆண்டு, இறுதியாண்டுப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன.

பரீட்சைத் திணைக்கள பிரதி ஆணையாளர் இத்தகவலை தம்மிடம் தெரிவித்ததாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 22 ஆம் திகதி இவ்விரு பரீட்சைகளையும் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், தவிர்க்க முடியாத காரணங்களினால் அது பிற்போடப்பட்டுள்ளதாகவும், பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் பிரதி ஆணையாளர் மேலும் தெரிவித்திருக்கிறார். (அ)

## இழுத்தடிக்கும்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காட்டிக் கொள்ளவும் அவர் விரும்புகிறார்.

அதற்காகவே நான்கு அத்தியாவசிய விடயங்கள் தொடர்பாகவும் மழுப்பல் பதில் ஒன்றை அனுப்பிவைத்திருப்பதோடு, மே மாதம் ஐந்தாம் திகதிக்கும் பத்தாம் திகதிக்கும் இடைப்பட்ட ஒரு தினத்தில் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தையை நடத்தலாம் என்றும் ஜனாதிபதி பிரேரித்திருக்கிறார் என்று புலிகள் கருதுகின்றனராம்.

ஆனால் ஜனாதிபதியின் காலத்தை இழுத்தடிக்கும் திட்டம் வெற்றியளிக்க விடுதலைப் புலிகள் இடமளிக்கப் போவதில்லை என்றும் —

உறுதியான — தீர்க்கமான — நடவடிக்கை ஒன்றை விரைந்து அவர்கள் எடுப்பர் என்றும் தெரியவந்தது. (உ)

## சமாதான ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இது பெரும் அநீதியாகும்.

ஐ. ஆர்.ஏ கெரிலாக்கள் யூரியாவை குண்டு தயாரிக்கப் பயன்படுத்துவர் என்பது தெரிந்திருந்தும் பிரிட்டிஷ் அரசு அயர்லாந்து விவசாயிகளுக்கு தேவையான யூரியாவை வழங்கி வந்தது அவ்வாறு செய்யாமல் யூரியாவை பிரிட்டிஷ் அரசு தடை செய்திருந்தால் அயர்லாந்து நிலைவரம் இன்று வேறு மாதிரி இருந்திருக்கும்.

அயர்லாந்து கெரிலாக்கள் யுத்த நிறுத்தம் செய்தவுடன் பிரிட்டிஷ் அரசு வட அயர்லாந்துக்கு அனுப்பியிருந்த தனது முழு இராணுவத்தையும் முகாம்களுக்குள் முடக்கியது; பாதுகாப்பு காரணங்களுக்காக மூடப்பட்ட அனைத்து பாதைகளையும் போக்குவரத்துக்காக திறந்து விட்டது. வீதிச் சோதனைகளையும் முற்றுமுழுதாக இடைநிறுத்தியது.

தனது இந்த நடவடிக்கைகளை இராணுவ நிலைப்பாட்டில் இருந்து கொண்டு பிரிட்டிஷ் அரசு எடுத்திருக்குமாயின் கெரிலாக்கள் தமது நடவடிக்கைகளைத் தொடர்ந்திருப்பர்.

அதனைத் தெரிந்து கொண்டே பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேயர் அரசியல் நிலைப்பாட்டில் இருந்து முடிவு எடுத்துள்ளார்.

அதனால் வட அயர்லாந்து வழமை நிலைக்குத் திரும்ப வழி ஏற்பட்டது.

அந்தச் சமூகத்தை எவருமே இனிமேல் யுத்தத்துக்கு அழைத்துச் செல்ல முடியாத அளவுக்கு அங்கு நிலைமை மாற்றம் கண்டுள்ளது.

இலங்கையிலும் சமாதான முயற்சி விரைவாகவும் பயனுள்ளதாகவும் அமைய வேண்டுமாயின் இராணுவ நிலைப்பாட்டில் இருந்து கொண்டு எதனையும் பரிசீலிக்கும் நிலைமை மாற வேண்டும்.

—இவ்வாறு விக்டர் ஐவன் மேலும் தெரிவித்தார். (ஐ-6)


# எடிசன் அக்கடமி

(யாழ். இந்து அருகில்)
411/1, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(கொக்குவில் இந்து அருகில்)
27, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

O/L DAY CLASS

| | | | |
|---|---|---|---|
| கணிதம் | — B P பாஸ்கரன் | கணிதம் | — B P பாஸ்கரன் |
| விஞ்ஞானம் | — J J கொலின்ஸ், செல்வா | விஞ்ஞானம் | — J. J. கொலின்ஸ், செல்வா |
| ச. கல்வி | — K S முத்துலிங்கம் | ச கல்வி | — ச கோபி |
| தமிழ் | — A ஆர்த்திகன் | தமிழ் | — S மணிமாறன் |
| ஆங்கிலம் | — J C J. பனுவேற்பிள்ளை | ஆங்கிலம் | — C சத்தியமூர்த்தி |
| வர்த்தகம் | — A. விக்கி | வர்த்தகம் | — T அரவிந்தன் |
| சித்திரம் | — S P சோதி | சித்திரம் | — S P சோதி |

★ கணிதம் மேலதிக வகுப்பு மூலம் அடிப்படையில் இருந்து போதிக்கப்படும்.

★ கணிதம் - விஞ்ஞானம் வாரத்தில் 6 மணித்தியாலத்திற்குக் குறையாத வகுப்பு

★ ஆண்டு 9, 10, 11 பாடத்திட்டத்துடன் மீட்டலும் இடம்பெறும்.

ஆரம்பம்: 20 - 04 - 1995
வியாழன் முற்பகல் 8-30 மணி

[சி-1015]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை ... (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் ... வீதி ... இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 17 - 04 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது